திசை

THISAI

திசை 1 | 22-4-1989 சனிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 15

நவீன கௌதமர்

சித்திரா பௌர்ணமியன்று ஜனநிபதி பிரேமதாச வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவுடன், நயினாதீவிற்கு விஜயம் செய்தார்.

நாகதீபு ரஜமஹாவிகாரை, நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் நடைபெற்ற பூஜைகளில் கலந்து கொண்ட ஜனநிபதி, கௌதம புத்தர் நயினாதீவுக்கு வருகை தந்து இரண்டு நாகமன்னர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த மோதலைத் தமது அன்புப் போதனையின் மூலம் தீர்த்து வைத்தார் என்ற ஐதீகத்தை, நினைவு கூர்ந்தார்.

'வெலி ஓயா' திட்டம்

வட, கிழக்கு இணைப்பை துண்டிப்பதற்கான சதி?

மகாவலி திட்டம் என்ற பேரில், 'வெலி ஓயா' என்னும் சிங்களப் பெயருடன் (தமிழ்ப் பெயர் மணலாறு) புதிய மாகாணம் ஒன்றை இலங்கை அரசு தமிழ்ப் பிரதேசத்துள் புகுத்தி சிங்களக் குடியேற்றங்களை மின்னல் வேகத்தில் செய்து வருவது தெரிந்ததே.

சிங்களஆட்சியாளரும், ராஜதந்திரிகளும் எப்பொழுதும் சதிகள், சூழ்ச்சிகளில் வல்லவர்கள். வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்க வகை செய்யும் சூழ்ச்சியை ஒப்பந்தத்தினுள்ளே ரகசியமாக புதைத்து வைத்துள்ளனர். அது ஒரு ராஜதந்திரக் கண்ணிவெடி. அதன் விளைவுகள், வெடித்த பின்னரே தெரியும்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு—கிழக்கை நிரந்தரமாக இணைத்து வைப்பதற்கு மாறாக, நிரந்தரமாக பிரித்து வைப்பதற்குரிய சூழ்ச்சியை மிகச் சூட்சுமமாக வரைந்துள்ளனர்.

ஒப்பந்தத்தில் "அடுத்தடுத்துள்ள மாகாணங்கள்" என்ற பதப்பிரயோகம் இத்தகைய சூழ்ச்சிக்குரிய ஒன்றேதான். இதன்படி சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படாமல் சாதாரண நிகழ்வேயே வடக்கு-கிழக்கை இணையவிடாது நிரந்தரமாகப் பிரித்து வைப்பதற்குரிய ஓட்டையை, ஒப்பந்தம் கொண்டிருக்கிறது. அந்த ஓட்டையைச் சரிவரப்பயன்படுத்தி நிறைவேற்றி வைக்கும் நடவடிக்கையாக "வெலியா" விவகாரம், எழுந்துள்ளது.

ஒப்பந்தத்தின் 2(1) பிரிவின் படி "அடுத்தடுத்துள்ள மாகாணங்கள் இணைந்து ஒரே நிர்வாகப் பகுதியாக இணைந்து செயற்பட அனுமதிக்கவும், கருத்தறியும் வாக்கெடுப்பின் வாயிலாக பிரிய அனுமதிக்கவும் நிறைவேற்ற அரசு உத்தேசிக்கும் நிலையில் வடக்கு—கிழக்கு மாகாணங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ள விதத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

நமது தலைமைகளும் பொறுப்பே!

1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர், மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய ஜி. ஜி. பொன்னம்பலம் கல்லோயா குடியேற்றத்தை வரவேற்றிருந்தார். இவர் மந்திரியாகப் பதவி வகித்த அக்காலத்திலேயே கல்லோயா குடியேற்றத் திட்டமும், அல்லை-கந்தளாய்க் குடியேற்றத் திட்டமும் நடைமுறைப் படுத்தப் பட்டனஎன்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நமது இன்றைய அவல நிலைக்கு எல்லாம் முற்று முழுக் காரணம் சிங்களப் பேரினவாதிகள் மட்டுமல்ல, தீர்க்கதரிசனமும் விவேகமும் அற்ற நமது பழைய அரசியல் தலைமைகளுமே என்பதும், ஞாபகத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இஸ்ரேல் நோக்கில் கல்வி பெறுவது 'கிறிமினல்' குற்றம்

கல்வி ஒரு அடிப்படை மனித உரிமையென ஐ. நா. சாசனம் கூறுகிறது.

ஆனால் இஸ்ரேலுக்கு 'கல்வி' ஒரு அடிப்படை மனித உரிமையாகப்படவில்லை.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக் குட்பட்டுள்ள கிழக்கு ஜெருசலேத்தில், ஓர் ஆண்டிற்கு முன்னர், மூன்று பலஸ்தீனப் பல்கலைக்கழகங்களை மூடுமாறு இஸ்ரேலிய அதிகாரிகள் உத்தரவிட்டனர். இப்பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் தலை மறைவாகப் பல்கலைக்கழக வகுப்புக்களை கிழக்கு ஜெருசலேத்திலுள்ள உயர்

(12-ஆம் பக்கம் பார்க்க)

அம்மையாரின் பிரேரணை

"கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களில் அடக்கு முறைகளை இஸ்ரேல் நிறுத்தவேண்டும், ஐ. நா., அணிசேரா இயக்கம் ஆகியவற்றின் தீர்மானங்களை ஏற்று (பலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

விஷமிகளின் பொறிக்குள் இருசமூகமும் விழுவதா?

கல்முனைப் பகுதியில் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மீண்டும் இன ரீதியான மோதல் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நோக்கத்திற்காகவே வெலி ஓயா திட்டம் உருவாக்கப்பட்டதாம்!

வெலிஓயா மாவட்டம் புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டது இராணுவ நோக்கத்திற்காகவேஎன, இராணுவ வட்டாரங்கள் அறிவித்துள்ளதாக, கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

வெலிஓயா புதிதாக உருவாக்கப்பட்ட 26ஆவது மாவட்டமா என்ற கேள்வி எழுந்ததற்குக் காரணம், ஏப்ரில் 12க்கும் 19-ஆம் திகதிக்கும் இடையில் (அதாவது யுத்த நிறுத்த காலத்தில்) சரணடையவிரும்பும் இளைஞர்கள் 26 வரவேற்பு நிலையங்களுக்குச் செல்லவேண்டும் என்று பத்திரிகைகள் அறிவித்ததே.

இவ்வரவேற்பு நிலையங்கள் மாவட்ட ரீதியாக 26 என வரிசைப்படுத்தப்பட்டிருந்தன.

இதுபற்றி, சன்டே ரைம்ஸ் பொதுநிர்வாக, மாகாண சபை, உள்துறை அமைச்சின் செயலாளர் நிறில் கமகேயிடம் விசாரித்தபோது, இந்தகைய மாவட்டம் நிர்வாக நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டிருப்பது பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்று கைவிரித்து விட்டாராம்.

யார் இந்த நாட்டை [-ஆள்பவர்கள்?

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமும் சிலில் நிர்வாகமுமா அல்லது இராணுவத்தினரா?

திசை

THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளி நாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

சிறை மதில்களின் பின்னாலிருந்து...

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

முதற்கண் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்கேப்பற்றி ஒரிரு வசனங்கள். நான் இலங்கை அரசால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த 27மா தங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் பெரும்பான்மையோர் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டும், எம்மில் ஒருதொகையினரின் விடுதலை மறுக்கப்பட்டுள்ளது.

தங்கள் 'திசை' பத்திரிகை ஒரிரு தினங்களுக்கு முன்னர் என்கரம் கிட்டியது. 11-3-89 அன்றைய திசையே எனக்குக் கிடைத்த முதல் திசை பத்திரிகையாகும். மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும், தமிழ்பேசும் மக்களின் பாரம் பரியப் பிரதேசத்திலிருந்து வெளியாகும் திசை பத்திரிகை, மிக நல்ல தரம்வாய்ந்ததாக இருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தங்களின் பத்திரிகையில் வந்த அய்வுரைக் கண்ணோட்ட ஆக்கங்களான 'தென்விலங்கையில் தமிழ் இளைஞர்கள்', 'பிரதமரின் நியமனம்' போன்றன சரியானமுறையில் எழுதப்பட்டுள்ளன.

நான் இங்கு சிறையில் இருப்பதால் இப்பத்திரிகைக் குச் சந்தா செலுத்த முடியாத நிலையில் இருக்கிறேன். உங்களால் 'திசை'யை எமக்கு அனுப்பமுடியுமென்றால், நாலும் சக கைதிகளும் தங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம்.

V.சுரேந்ரா
U.C.4746,
C/வார்ட், புதிய மகளிர் சிறைச்சாலை, கொழும்பு

தங்களின் 'திசை' பத்திரிகையைப் பார்வையிட்டேன். உங்களை எப்படிப் பாராட்டி

ளுக்குவிப்பதென்றே தெரியவில்லை. இதுவரை தமிழில் வெளிவந்த எந்தப்பத்திரிகையும் செய்யாத பல அரிய பணிகளை, நீங்கள் பத்திரிகையினூடாகச் செய்கிறீர்கள். நான் ஒரு ஆசிரியராகப் பணிபுரிவதனால் எனது உயர்தர மாணவர்களுக்கு மட்டுமல்ல வெளிநாட்டு நண்பர்களுக்கும் உங்கள் பத்திரிகையை அறிமுகப்படுத்தியுள்ளேன். நிறையப்பேருக்கு இப்படித் தரமான விடயங்களுடன் ஒரு பத்திரிகை வெளிவருவது தெரியாது.

மேலும், நான் பயிற்சி பெற்ற புகைப்படக் கலைஞராகவும் பணிபுரிகிறேன். எனவே பொருத்தமான புகைப்படங்களை அனுப்பினால் தங்கள் பத்திரிகையில் வெளியிடுவீர்களா என்பதையும் எனக்கு அறியத்தரவும்.

S.ஜீவராஜா B.A.
சேனநாயக்க வீதி, கண்டி.

(இரண்டொரு படங்களை அனுப்பிவையுங்கள். பொருத்தமானால் வெளியிடுவோம். (—ஆர்)

மனிதநேயமும், பொறுப்புணர்வும், நிதானமும், தேர்ந்த கலாரசனையும் கொண்டு ஒரு வாரின்ற திசையின் செழுமைக்காப் பங்களிப்புச் செய்கின்ற கலைஞர்கட்கு எனது மனம் கவிந்த பாராட்டுக்கள்.

படித்து முடிந்த பிறகும்—பேணிக்காத்து அவ்வப்போது தேவையான உள்நாட்டு விவகாரங்கள் பற்றிய உங்களின் தெளிவான பார்வையை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளமுடிகிறது.

சிறுகதை, கவிதை, குறுநாவல் என்பவற்றிலும் தவியான ஒரு ரசனையைத் தூண்டும் தன்மை, தரமான ஆக்கங்களை அறிய ரசிக்கத்தூண்டும் போக்கு என்பவற்றைக் காணமுடிகிறது.

ஆனால் சிறிது அதிர்ச்சி தரும் விதமாய் 4-3-89 இதழில் 'விவராத்திரி நினைவாக' என்ற கட்டுரை பிரகரமாகியிருக்கிறது. இப்படியான கட்டுரையை — திசை தந்ததுதான் எனக்குள் 'ஒரு பிடி விசாரத்தை' ஏற்படுத்தியிருக்கிறது.

ந.சத்தியபாலன்
ராஜ வீதி,
நல்லூர்.

'எண் திசை'யும் கண்டேன். இன்றைய ஈழத்தமிழர் வரலாற்றுத் தேரவலியே ஓர் பகுதியே 'திசை'யின் அறிவியற் பங்களிப்பு. மகத்துவம் மிக்கதும் உன்னதமானதுமான தங்கள் பணி வெற்றியுடன் தொடரட்டும்!

நம்பிக்கையையும் ஆவலையும் தூண்டும் 'திசை' யின் தொடர்ந்த விடயதானங்கள் மலிந்வையும், புதிய பலத்தையும் தருகின்றன. திசைமுகம், உலக— இலங்கை— ஈழப்பகுதிகளின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நிகழ்வுகளின் ஆரோக்கியமான விமர்சனக் கட்டுரைகள் தூரவானம், குறுநாவல் எல்லாமே நன்ருகவுள்ளன. சில விடயங்களின் நோக்குகள் இன்னும் சற்று ஆழமாக இருந்திருக்கலாமோ வென த்தோன்றினும், பத்திரிகையின் பக்கப் பிரச்சினைகளும் கூடவே புரிகின்றது.

என்.ரி.அன்பானந்தன்
மருதடி லேன்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் கல்லூரியில்

கமப் பொறியியற் பயிற்சியில் மகளிர் ஒதுக்கப்படுவதேன்?

மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நிர்வேலியில் 8.4.1989 இல் ஒரு நாட் கருத்தரங்கு நடத்தப்பெற்றது. அங்கு பெண்கள் நிலையற்றி பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. கருத்தரங்கில் உரையாற்றிய மகளிர் அபிவிருத்தி நிலைய தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன், நிராமமட்டத்தில் பெண்கள் தமது வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வருமானம் கொடுக்கக்கூடிய சிறிய வேலைத்திட்டங்களைத் தயாரிக்கும் முறைகளை விளக்கினார். இன்று அபிவிருத்தியில் ஈடுபடும் எந்த நிறுவனங்களும் பெண்கள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வழிவகைகளை ஊக்குவிக்க முன் வந்துள்ளனர். இவற்றிற்காக பல திட்டங்கள் நிறியளவில் தயாரிக்கப்பட்டு சாத்தியமாகக் கூடிய வகையில் செயற்படுத்தப்படுகின்றன. ஆயினும் இவ்வாருன செயற்திட்டங்கள் தயாரிக்கப்படும் போது சில அடிப்படை அம்சங்களைக் கவனத்திற் கொள்ளாது விடும் போது, அத்திட்டங்கள் தோல்வியடைவது கண்கூடு. எத்திட்டமாயினும், ஓர் குறிப்பிட்ட மக்களுக்காக தயாரிக்கப்படும் போது அப்பிரதேச சூழல், வளங்கள், மக்களின் அபிலாசைகள், தேவைகள், கவனத்திற் கொள்ளாது விடப்படுமாயின் அவை தோல்வியிலேயே நழுவும், ஆகவே நிட்டங்கள் குறிப்பாக பெண்கள் அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படும் போது, பல அம்சங்களை பற்றிய விரிவான தகவல்களை சேகரித்து அதன் பின்னரே செயற்படுத்துதலின் அவசியத்தினை வற்புறுத்தினர்.

பின்னர் உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக தமிழ் துறை டிரெஷ்ட விரிவுரையாளர் திருமதி இத்திரலேகா மௌனகுரு, பெண்களின் பாலாநியான தொழிற்பாடும், அதனால் இன்றைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார். இன்றைய நிலையில் பெண்கள் இதுவரை ஆண்களுக் கென்று ஒதுக்கப்பட்ட துறையில் ஈடுபடுவதற்கு முன் வந்துள்ளனர். அதாவது இன்று எமது சூழலில், பல வேறு அரசியல் பின்னணி காரணமாக ஆண்கள் வெளிநாடு சென்றமை, பெரும்பாலான இளைஞர்கள் இறந்து போனமை காரணங்களினால் இதுவரை ஆண்கள் ஈடுபட்டுவந்த துறைகளான, சந்தைக்குப் போகுதல், வங்கிகட்குப் போதல் போன்ற துறைகளில் பெண்கள் ஈடுபடுகின்றனர்.

விவசாய நிலங்களிலும் பெண்களுக்கு வழங்கப்படும் வேலைகள் நாற்றுநடல், எடுத்தல் போன்ற உடம்பை வளைந்து நீண்ட நேரம் நின்று பார்க்கும் தொழில்களே. இதனால் பெண்கள் உடல்ரீதியான பலபிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இன்று பெண்களுக்கு தொழில் ரீதியாக எவ்வித பாரபட்சமும் காட்டப்படுவதில்லை என்று கூறப்பட்ட போதிலும், இவ்வாருன நிலமைகளில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக யாழ்ப்பாண கல்லூரியில் அண்மையில் ஆரம்பிக்கப்படவுள்ள விவசாய பயிற்சி நெறிக்கு கொடுக்கப்பட்ட விளம்பரத்தில் கமப்பொறியியற் பயிற்சி ஆண்களுக்கும், மனை பொறியியற் பயிற்சி பெண்களுக்கும்என வரையறுக்கப் பட்டிருப்பது அவதானிக்கத்தக்கது. மேலும் அதிகமான பெண்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும் பெரும்பாலானவர்கள் 6ஆம் தரத்திற்கு 8தேயே ஆசிரியத் தொழிலில் அமர்த்தப்படுகின்றனர். மேற் தரங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படாமையினால் இவர்களது நிறமை தடைப்படுகின்றது. உளவியல் ரீதியில் தாய்க்கும் குழந்தைக்கும் ஓர் நெருங்கிய உறவு காணப்படுவது என்பது இன்று ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனேயும் இவர் வற்புறுத்தினர். கருத்தரங்கின் முடிவில் நிர்வேலி பகுதிக்கான இணைப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவியாக செல்வி ரி. நல்லதம்பி தெரிவு செய்யப்பட்டார்.

நிர்வேலிமாதர் சங்கத் தலைவியும் இளைப்பாறிய அதிபருமானசெல்வி நல்லதம்பியும் உரையாற்றினர். O

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, லண்டன், போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

* தாய்வான் செல்ல விரும்புகிறவர்களும் எம்மைத் தொடர்பு கொள்ளவும். சம்பளம்: 200 டொலர் 5 வருட ஒப்பந்தம்

* பாஹ்ரேன், குவைத், சவூதி போன்ற நாடுகளுக்கும் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் நாடவேண்டியது

V. T. R. TRAVELS
41, 3rd Cross Street,
JAFFNA.
A—10

வரலாற்றின் கதாநாயகர்களில் ஒருவர்

வி. இ. லெனின்

தருணம் இது —
லெனின் கதையைச் சாற்றத் தொடங்குகிறேன்
வருத்தம் நெஞ்சைவிட்டு
மறைந்துவிட்ட தால் அல்ல;
ஞானி லெனின் நம்மிடையே
நாவலித்த கோஷங்கள்
சூறு வளிக்காற்றாய்
சுழன்றடிக்கும் காலமிது!
கொடிய பெருந் துயர்மனத்தே
குவிந்தாலும் நாமெல்லாம்
விடுவதுவோ கண்ணீரை?

எழுதடா எழுதீவிடு! —
என்னிதயம் இவ்வாறு
அழுத்துமுன் சொல்கிறது :
எழுதத் தொடங்கி விட்டேன்!

— மயாகோவ்ஸ்கி

காலமோ நிற்காமல் அவசரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. நாமோ அதனோடு ஈடு கொடுக்க முடியாமல் தவிக்கிறோம். நாம் என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறோம். ஆனால் பிறக்கிறவர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறவர்கள் வாழ்கிறார்கள், இறக்கிறவர்கள் இறக்கிறார்கள், அதில் ஒரு சிலரே வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் தங்களுக்காக மட்டும் இல்லாமல் சமூகம் கருதாமல், பிறருக்காக, மக்களுக்காக, நாட்டுக்காகப் பொது நலம் கருதி வாழ்ந்தார்கள், உழைத்தார்கள். தங்களுக்கிடையே எவ்வாறுஎல்லாம் பயன்படுத்தலாமோ அவ்வாறெல்லாம் பயன்படுத்தினார்கள் என்றால் மிகையாகாது.

அந்த வகையில் சோவியத் ரஷ்யாவிலேபிறந்த விளாநிமீர் இலியிச் லெனின் வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டார். இங்கு நாம் சற்று சிந்திக்கலாம். அவர் எதற்காக வாழ்ந்தார், எப்படி வாழ்ந்தார், தனக்காக மட்டும் வாழ நினைத்திருந்தால் எப்படி வாழ்ந்திருக்கலாம் என்று கேள்விக்கணைகளைத் தொடுப்போமானால் அதற்கான விடைகளை நாம் அறியலாம். 21.1.1989 உடன் லெனின் அவர்கள் இறந்து 65 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் அவர் புகழோ அழியாமல் இருக்கிறது. உலகம் உள்ளவரை அழியாது. அப்படியான ஒருவரை இன்று நினைவு கூருவது பொருத்தமானதே.

பிறப்பு :

1870 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 22 ஆம் திகதி ரஷ்யாவில் உள்ள மக்களுக்காக, தொழிலாளர்களுக்காக, உழைப்பாளர்களுக்காக ஒரு வழிவை காட்டவும், புதிய சமூகஅமைப்பைக் கட்டியெழுப்பவும், முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் விரட்டியடிக்கவும் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்துக் கட்டவும் விளாநிமிர் இலியிச் உல்யாவ் ஆக ரஷ்யாவல் வோல்கா ஆற்றருகே உள்ள சிம்பிர்க் நகரத்தில், மாபெரும் மனிதர், புரட்சிப் புரவலன் லெனின் அவர்கள் பிறந்தார்.

இவருடைய தகப்பனாரோ மக்கள் கல்வி நிலையங்களின் இயக்குனர். தனது கடின உழைப்பாலும், குளிரினாலும் லெனின் இளம் வயதிலேயே

இன்று புக புருஷரான லெனின் அவர்களின் 120ஆவது பிறந்தநினம் ஆகும். அதனோடொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

இறந்தார். இவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார். அவர்களோ நேசித்தார். தாயாரோ அநேகமான நேரங்களில் வீட்டில் ஆடைகள் தைப்பதையே வேலையாகக் கொண்டு இருந்தார். லெனினின் அண்ணன் அலெக்சாந்தரும் அக்கால அளவும் ஜாரைக் கொலை செய்ய எத்திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு அண்ணன் 1887ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். அக்கால விடுதலையடைந்த பின்னர் அண்ணனின்

ஈழபாரதி

கோழர் ஒருவரை மணம் செய்துகொண்டார். லெனினுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் இருந்தார்கள். ஒரு தங்கை இளம் வயதிலேயே கடும் காய்ச்சலினால் இறந்தாள். லெனினுடன் கடைசி வரை தங்கை மரியா வாழ்ந்தார். இவ்குடைய கடைசிக் காலங்களில், (நோய்வாய்ப் பட்டிருக்கையில்) பல உதவிகள் செய்து பணி புரிந்தார்.

அறிவதில் ஆர்வம்:

இவர் சிறுவயதிலேயே ஏராளமாகப் புத்தகங்கள் படிப்பதில் அக்கறைகொண்டு இருந்தார். அதனால் அவருடைய சிந்தனைகளும் சிறு வயதிலேயே விரிவடைந்தன. இளம் வயதில் நாம் எதற்காக வாழ்கிறோம்? வாழ்வதும், சிந்தனை செய்வதும், கேட்பதும், அறிவதும், ஏதேனும் செய்வதும் கடமையானவை என்று எண்ணினார். இவர் இளம் வயதிலேயே நிறமைசாலியாகவும், புது விஷயங்களை எளிதில் சட்டென கிரகித்துக் கொள்ளக்கூடியவராகவும் இருந்தார். வேறு நூல்களைப் படித்ததால் சமூகத்தில் நிலவிய அநீதிகளைக் காணும்படி, கண்களைத் திறந்து விட்டது. மக்களின் காவலாளர்கள் புரட்சியாளர்கள் என்பதைப் புரிந்துகொண்டார்.

கல்வி:

இவருடைய ஆரம்பக் கல்வி வீட்டிலேயே நடைபெற்றது. 1879ஆம் ஆண்டு உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்தார். உயர் நிலைப் பள்ளிப் பரீட்சையில் இவர் அளித்த பதில்களைக் கண்டு ஆசிரியர்கள் பரவசமடைந்தார்கள். அவ்வளவு சிறப்பாக விடையளித்தார். உயர்நிலைப் பள்ளியில் சிறந்த மாணவனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதனால் இவருக்குத் தங்கப் பதக்கம் கிடைக்க இருந்தது. ஆனால் ஆசிரியர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. இவருடைய அண்ணன் ஜாருக்கு எதிராக செயல்பட்டான் என்பதைக் காரணம் காட்டினார்கள். ஆனாலும் இறுதித் தேர்வில் மிக்க சிறப்பாகவும், பாராட்டத்தக்க வகையிலும் தேறி இருந்ததால், பதக்கம் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள். பல்கலைக் கழகத்திலும் சேர்ந்தார்.

1887 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம்திகதி மொஸ்கோ மாணவர் கூடி ஜார் அரசாங்கத்திற்கு எதிராக கோரிக்கை விட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்க மறுத்ததால், மாணவர்கள் (லெனின் உட்பட) தங்கள் பல்கலைக்கழக சீட்டுக்களை திருப்பிக் கொடுத்தார்கள். (இவருக்கோ அண்ணன் இறந்தில் இருந்து ஜார் அரசாங்கத்தின் மீது வெறுப்பு) அன்று மாலையே இவருடன் மற்றவர்களும் பல்கலைக் கழகத்தில் இருந்து நீக்கப்பட்டார்கள். அத்துடன் இரவு கைது செய்யப்பட்டு கக்கஷ்கினோ கிராமத்திற்கு பொலிஸ் கண்காணிப்பில் அனுப்பப்பட்டார்கள்.

மக்களின் இன்பத்திற்காகவும், விடுதலையின் பொருட்டும் ஜாருக்கும், பணக்காரவர்க்கங்களுக்கும் எதிராகப் போராடுவதற்காக தன் வாழ்நாள் முழுவதையும், ஆற்றல் அனைத்தையும் வழங்க விரும்பினார். அவருடைய முடிவான குறிக்கோள் புரட்சியாக அமைந்தது. ஆனால் வாழ்க்கை நடத்துவதற்கு உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும். பல்கலைக்கழகப் படிப்பை முடித்து ஏதேனும் துறையில் தனித் தேர்ச்சி பெறுவது, பட்டம் பெறுவது இன்றியமையாதது என எண்ணினார்.

அதனால் கஸான் பல்கலைக் கழகத்தில் சேர மனுப் போட்டார்; மனு நிராகரிக்கப்பட்டது. இவரும் தாயும் சேர்ந்து பலமுறை முயன்றார்கள். பலன் கிடைக்கவில்லை. அதனால் பல்கலைக்கழகப் பாடங்களைத், தானே கற்பது என முடிவு எடுத்தார். நான்கு வருட சட்டக் கல்வியை, ஒன்றரை வருடத்தில் பழுதறக் கற்று பரீட்சை எடுக்கப் பீட்டல் பார்க்கிற்குப் பயணமானார். கடினமான கேள்விகளுக்கும், இளைஞர் லெனின் விஷயத்தை ஆழ்ந்து அறிந்து இருந்ததால் சரளமாக விடையளித்தார். அதனால் சிறந்த மதிப்பெண்கள் பெற்றார். பல்கலைக்கழக இறுதித் தேர்வுக்குரிய ஆக உயர்ந்த மதிப்பெண்கள் பெறத் தகுந்தவரென, முடிவு செய்யப்பட்டது.

சில காலம் ஸமராவில் வாழ்ந்தார்கள். அங்கு அவரது

வி. இ. லெனினும், மனைவி கூருப்ஸ்கயாவும் 'கோர்க்கி' என்ற இடத்தில் (1922).

வாழ்க்கையின் முக்கியமான பருவமாக விளங்கியது. அங்கே பல்கலைக்கழகத் தேர்வுக்குப் பயின்றார். மார்க்ஸின் போதனைகளை நன்கு ஆழத் தெரிந்து கொண்டார். இவரும் மார்க்ஸியவாதியானார்.

தொழிலாளர்களுக்காக உழைத்தல்:

1893 ஆம் ஆண்டு குடும்பம் மொஸ்கோ சென்றது. இவர் தனிய பீட்டர்ஸ்பார்க்க் சென்றார். அங்கே தொழிலாளர்களுக்காக வழக்காடினார், தனது அயராத உழைப்பாலும், ஊக்கத்தாலும் மார்க்ஸியவாதிகளுடன் தொடர்பு கொண்டு 'புரட்சி சங்கம்' உருவாக்கினார். பின்னர் இது "தொழிலாளர் வர்க்க விடுதலைக்காப் போராடும் சங்கம்" என்று அழைக்கப்பட்டது. இவர்கள் இதன் மூலம் போராட்டம் நடத்தி வந்தார்கள். 1895 ஆம் ஆண்டு போராட்டச் சங்கத்தினர்—லெனின் உட்பட கைது செய்யப்பட்டனர். ஆனால் சங்கம் சிதறிவிடவில்லை. தொடங்கப்பட்ட வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தன. 14 மாத சிறைத்தண்டனையையும் 3 ஆண்டு சைபீரிய வாசத் தண்டனையையும் பெற்று சைபீரியா சென்றார்கள். இவரது காதலியும் தொழிலியுமான நடேஜ்தாவும் கைது செய்யப்பட்டு அனுப்பப் பட்டார். இளம் காதலர்களான இவர்களது வாழ்க்கை இன்பமாகக் கழிந்தது. ஆனால் இவர் புரட்சிக்கு வேண்டிய திட்டங்களை மனதில் நீட்டிக் கொண்டார். 1900 ஆம் ஆண்டு எல்லோரும் சைபீரியாவைவிட்டுப் புறப்பட்டனர். மொறு தத்திறிகை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது. வேறு பெயரில் ஒன்றை வெளியிட்டனர்.

1910 ஆம் ஆண்டு ஸ்வீடன் நகரில் விரிவுரையாற்ற வந்திருந்தனர். அங்கு நீண்ட நாட்களின் பின்பும், கடைசியாகவும் தன் தாயைச் சந்தித்தார். 1911 ஆம் ஆண்டு பாரீஸில் ஒரு கிராமத்தில் லெனின் தம்பதிகள் தங்கியிருந்து கொண்டு தொழிலாளர் மாணவர் கட்சிப் பள்ளி நடத்தினார்கள்.

பரோனில் அரசியல் பொலிஸார் லெனினைக் கைது செய்தனர். தோழர்களின் முயற்சியால் அவரது உயிர் தப்பியது. அதன் பிறகு சுவிற்சலாந்திற்குச் சென்றார்.

ரஷ்யா செல்லல்:

1914 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போர் மூண்டது. இவர் பெர்லினில் இருந்தார். தன் வாழ்நாளை எதற்காக அர்ப்பணித்தாரோ அது 1917 ஆம் ஆண்டு தொடங்கி விட்டது. ரஷ்யாவில் புரட்சி தொடங்கி விட்டது. தன் தாய் நாடு செல்ல அவதிப்பட்டார். கவலை கொள்ளத் தொடங்கினார். ஆனால் ஒரு வழியாக அனுமதி பெற்று ரஷ்யா சென்றார். அங்கு தொழிலாளர்களும், செங்கொவற்படையினரும், குழுமியிருந்து, "புரட்சி வாழ்க" "லெனின் வாழ்க" என்று உணர்ச்சி பொங்கக் கோஷமிட்டு, அமோக வரவேற்புடனும், மரியாதையுடனும் வரவேற்றார்கள்.

(11ஆம் பக்கம் பார்க்க)

பிறநாடுகளுக்குச் செல்லல்:

அனைத்து சக்திகளையும் ஒன்றினைக்கும் நிட்டத்திற்காக இஸ்க்ரா என்ற பத்திரிகையை வெளியிட முடிவு செய்தார். ஆனால் ஜாருக்கும், அரசாங்கத்திற்கும் எதிராக ரஷ்யாவில் பத்திரிகை வெளியிட முடியாது. ரஷ்யாவுக்கு வெளியே அச்சிட முடிவு செய்து ஜேர்மனிக்குப் பயணமானார், ஜேர்மனியில் முதல் இதழ் அச்சிடப்பட்டு, பல கிராமங்களின் மத்தியில் பீட்டல் பார்க் கொண்டு வரப்பட்டது. இவர் இதன் தலைமையாசிரியர். 1901 இல் இருந்து தனது பெயரை லெனினாக மாற்றினார். அங்கும் பிரச்சினை வர லெனின் தம்பதிகள் ஜெனிவாவில் குடியேறினர். இன்னு

மாகாண சபையை குறுகத் தறிக்கும் கோடரி பிரேமாவின் கையில்

மாகாணசபை அமைப்பு முறையை வெறுமனே ஒரு நிர்வாக அமைப்பு முறையாக மாற்றி விடுவதற்கான சதித்தனமான நடவடிக்கைகளை, இலங்கை அரசு கையாளத் தொடங்கியுள்ளது போல் தெரிகிறது. "மாகாண சபை என்பது பெயரளவில் கடதாசியில் எழுதப்பட்ட அமைப்புத்தான்'' என்று, முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறியதையும் குறிப்பிட வேண்டும் ("சண்டே ஐலன்ட்" பேட்டி, 9 ஏப்ரில் 89) அதே வேளையில் மாகாண சபை அமைப்பு முறை தமிழ் மக்களுக்குத் திருப்தி தராத ஒன்று என்ற கருத்து, ஏற்கனவே பலராலும் குறிப்பிடப்பட்டு வருவதும் தெரிந்ததே. அப்படிப்பட்ட மாகாணசபையைக்கூட, முழுக்க முழுக்க ஒரு நிர்வாக அமைப்பாக மாற்றிவிடுவதற்கான நரித் தந்திரோபாயங்களே, இலங்கையரசு இப்போது கையாளத் தொடங்கியுள்ளது என்பதற்கான முன்னறிவுப்புகளே, ஜனாதிபதி பிரேமதாச வெளியிட்ட முக்கிய அறிவிப்புகளிலிருந்து காணக்கிடக்கிறது.

25 மாவட்டங்களுக்கும் அரசாங்கத்தின் மாவட்டப் பிரதிநிதிகள் முறையை உருவாக்குதல், மாகாண அரசாங்க அதிபர்களை நியமித்தல், தேசிய காணி ஆணைக்குழுவை அமைத்தல் என்ற மூன்று முக்கிய முடிவுகளே பிரேமதாச வெளியிட்டுள்ளார். இவை மாகாண சபையை வெறும் நிர்வாகஅமைப்பு முறைக்குள் தள்ளிவிடும் முன்னறிவிப்புகளாகவே விளங்குகின்றன. அதாவது மாகாண சபை என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட, சுயமான கொள்கை வகுக்கும் அதிகாரமுள்ள சபை என்பதற்குப் பதிலாக, மத்திய அரசின் நிர்வாக அமைப்புக்கு கீழ்ப்பட்டதான மொத்த நிர்வாக அமைப்பின் ஓர் அலகாக மாறிவிடும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை கூட மக்களால் தெரிவு செய்யப்படுபவை தான். ஆனால் அவை, கொள்கை வகுக்கும் அதிகாரம் அற்றவை. அதற்கு மாறாக கொள்கை வகுப்பதில் சிறிதளவும் சம்பந்தமற்ற மின்னிறியோகம், நீர் விநியோகம், சுகாதாரவசதி, போன்ற சாதாரண நிர்வாகக் கடமைகளையே அவை செய்கின்றன. அதே போலவே இங்கே பத்தாண்டுகளுக்கு முன்னர் அளிக்கப்பட்ட சில வாக்குறுதிகளைக் கூட, படிப்படியாக நிர்வாக அமைப்புக்குள்ளானதாக மாற்றிவிடும் முயற்சிகளாகவே, பிரேமதாசாவின் இந்நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட வேண்டியவை.

சிங்கள அரசியல்வாதிகள் அரியல் நெறியே - கழிவு ஒட்டம் அறிந்தவர்கள்; அரசியல் தந்திரோபாயம் மிக்கவர்கள். 2500 ஆண்டுகளாக அரசாட்சி நிறுவனத்தைக் கையாளும், அநுபவம் மிக்க பாரம்பரியம் அவர்களுக்குண்டு. அவர்களோடு ஒப்பிடும் போது நமது தமிழ் அரசியல் வாதிகளுக்குப் பின்னால், அரச நிறுவனத்தைக் கையாளும் அநுபவத்திறன் மிக்க பாரம்பரியம் மிக மிகக் குறைவு என்பதை, வெட்கத்துடன் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். 2500 ஆண்டு கால இலங்கை வரலாற்றின் ஊடாகப் பார்த்தால், ஒருண்மை தெளிவாகும். பெரிய பலம் வாய்ந்த அந்நிய அரசுகளின் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது சிறிதான சிங்கள அரசு படைப்பலத்தில் தங்கியிருக்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருந்தது. அந்த நிர்ப்பந்தம் ராஜதந்திர, அரசியல் தந்திரோபாயங்களினுலேயே அத்தகைய நெருக்கடிகளை முகம் கொள்ள வேண்டிய தேவையை உருவாக்கியது. அந்தத் தேவை ராஜதந்திரத்தையே தனது பலமாக மாற்றவும், அதைப் பொருத்தமாகப் பிரயோகிக்கும் கலையில் வல்லவர்களாகவும் சிங்கள ஆட்சியாளர்களை உருமாற்றவும், செய்தது. (ஆட்சியாளர் என்பது இங்கு அரசு நிறுவனத்தையே கருதுகிறது)

இந்த வகையில் பார்க்கும் போது, இனப் பிரச்சினை சம்பந்தமாக அந்நியத் தலையீட்டை எதிர் கொள்ள முடியாத சூழலில், இலங்கை அரசு ஏன் ஒப்பந்தத்துக்கு தயாராவது என்பதைப், புரிந்து கொள்ளலாம், ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு அதன் மூலம் வழங்கப்பட்டதான குறைந்த பட்ச உரிமைகளைக் கூட, தனக்கு இருக்கின்ற ராஜதந்திர அநுபவத்தினூடாக, காலவாரி விட்டுத் தத்தளிக்கிறது; நிர்வாக அமைப்பு முறைக் குறுக்கீட்டால் குறுகத் தறித்துவிடப் பார்க்கிறது. எங்கே சிங்கள ராஜதந்திரம்.

குறுகத் தறிக்கும் இந்தக் குறுக்கீடுகளைக் கூட, வார்த்தை மூலாம்களைப் பூசியே மறைவான பாணியில் கையாளுகிறது. 25 மாவட்டப் பிரதிநிதிகளை நியமிப்பது பற்றிப் பிரேமதாச விளக்குகையில் மாகாணசபையின் கடமைகள் நீதியாகவும், நேர்மையாகவும், சமமாகவும் நடாத்தப்படுகின்றனவா என்பதையே அவர்கள் கண்காணிப்பார்கள் என்கிறார். இது நிர்வாக மேற்பார்வைக்கு போர்த்தப்பட்ட ஒரு 'கண்காணிப்பு' முகமூடியாகும்.

மேலும் பத்துப் பேரை உறுப்பினராகக் கொண்ட தேசிய ஆணைக் குழுவானது காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சரின் சிபார்சின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது, குடியேற்றங்களைக் கையாளும் குழுவேயாகும். இது மாகாண அரசை மீறிய சக்தியும் அதிகாரமும் கொண்டது.

அத்து, மாகாண அரசாங்க அதிபர் நியமனம். இது பற்றிய விபரங்கள் வெளியிடப்படாத போதும், இது மாகாணசபையின் அதிகாரங்களை மத்திய அரசின் நிர்வாக அமைப்பின் கீழ் கட்டுப்படுத்துகிற ஒரு செயலே. மத்திய அரசையும் மாகாண சபையையும் தொடர்புபடுத்தும் ஒருவராக கவர்னர் என்பவர் இருந்தும், மாகாண அதிபர் என்ற நியமனம், நிர்வாக அமைப்பின் மேலாக்கை சின்னமாகவே காணப்படுகிறது.

மொத்தமாகப் பார்த்தால், மாகாணசபைக்கு மேலாண்மை மிக்கதான மத்திய அரசின் நிர்வாக வலைப் பின்னலின் கீழ் அரசாங்க அதிபர், மாகாண அரசாங்க அதிபர், மாவட்ட பிரதிநிதி என்று நீளும் நிர்வாகப் படிமுறை மேலாதிக்கம் இறுதியாக மத்திய அரசின் துறைசார் அமைச்சில் (Apropriate Ministry) போய் தொங்கி நிற்கச் செய்யும் வகையிலேயே, இன்றைய ஜனாதிபதியின் மாகாண சபை பற்றிய செயல் திட்டங்கள் உள்ளன.

பிரேமதாசவின் இத்தகைய அறிவிப்புகளின் பின்னால் அரச நிறுவனத்தின் நிர்வாக - ராஜதந்திர செழுமைமிக்க மூளைகள் பொதிந்துள்ளன என்பதில், சந்தேகமில்லை. கொக்கு க்கு வட்டத்தட்டில் பாலூற்றி விருந்து வைக்கும் நரியின் மூளைகள்.

வரலாற்று நடைமுறைகளைக் கணிப்பிடு செய்யும் போது, மார்க்ஸ் கூறிய வாக்கியம் ஒன்றை நாம் இங்கு நினைவு கூருதல் மிகப் பொருத்தமாகும்.

"பலவேளைகளில் மன்னர்கள் அல்லது ஆட்சியாளர் என்போர், மரமண்டைகளாக இருந்துள்ளனர். ஆனால் அவர்களின் நடவடிக்கைகளுக்குப் பின்னால், பெரும் சக்தி வாய்ந்த மூளைகள் சத்தமின்றி தம் கைங்கரியங்களை நிறைவேற்றி விட்டு, மௌனமாய்ப்புதைந்து கிடக்கின்றன''. □

அதிகார வர்க்கத்தால் அமுக்கப்படும் அதிகாரப் பரவலாக்கம்

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்குவதற்கு சிங்கள துரைத்தன அதிகார வர்க்கம் தடையாக உள்ளது. என்ற கருத்து, இப்பொழுது பரவலாகப் பேசப்படுகிறது. நடைமுறை ரீதியாக இப்பிரச்சினை உணரப்படுகின்றது. என்பதையே, இப்பேச்சுகள் புலப்படுத்துகின்றன.

திருமூலன்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்ட ரீதியான முறையில் ஓர் அதிகாரப் பரவலாக்கல் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டாலுங்கூட, நடைமுறையில் அதனை நிறைவேற்றுவதற்கு சிங்கள துரைத்தன அதிகார வர்க்கம் (Bureaucracy) தடையாகவே இருக்கும் என்ற கருத்து இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பாகவே பலராலும் எழுத்து வடிவில் முன்வைக்கப் பட்டது என்பதும் இங்கு கவனத்துக்குரியது.

இன்று நடைமுறைரீதியாக உணரப்படும் இச்சிக்கலை நாம் சற்று அறிவு பூர்வமாக விளங்கிக்கொள்ள முயல்வோம். 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கையின் அரசு இயந்திர நிர்வாக அமைப்பானது, நூற்றுக்கு நூறு வீதம் சிங்கள மயமானதாக மாறியது. 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் உருவான மாற்றங்களே, இரண்டாவது சிங்கள பௌத்த மறுமலர்ச்சி என அழைப்பர். (முதலாவது சிங்கள பௌத்த மறுமலர்ச்சி 1880 களில் ஒல்கொட், அநகாரிக தர்மபால, பியதாஸ சிறிசேன போன்றவர்களின் தலைமையில் ஏற்பட்டதென்பர்).

இந்த இரண்டாவது சிங்கள பௌத்த மறுமலர்ச்சியானது அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாகம், கலை, இலக்கியம், கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் விரவிச் செறிந்தது. இதனால் ஒட்டு மொத்தமான சிங்கள பௌத்த துரைத்தன அதிகார வர்க்கம் முழு வடிவில் நிலை பெற்றது.

சட்டவடிவில் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டு இருந்தாலும் கூட, நடைமுறைப் படுத்துவதில் துரைத்தன அதிகாரத்துக்கே பெரும்பங்குண்டு. உதாரணமாக தமிழ் மொழி விசேட கூரத்து ஏற்பாடுகளும், அதன்பின் அநுற்கான விதிகளும் சட்ட வடிவம் பெற்றதில், சிங்கள மொழியில் அரசினால் அனுப்பப்படும் கடிதங்களுக்கு இரண்டு மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும் என்பதும் ஓர் அம்சமாயிருந்தும், நடைமுறையில் அது புறக்கணிப்புக்குள்ளானது. இதே அதிகார வர்க்கத்தாலேயே என்பதைக் குறிப்பிடலாம்.

இன்னுமோர் உதாரணத்தைப் பார்ப்போம். தமிழ்ப் பகுதிக்கென, அரசினால் சட்டபூர்வமான நிதி ஒதுக்கீடுகள் சில நிறுவனங்களுக்கென மேற்கொள்ளப் பட்டது. ஆனால் குறித்த நிர்மாண வேலைக்கான சில அடிப்படை உபகரணங்களின் இறக்குமதி அல்லது விநியோகம் என்பவற்றைத் தாமதிக்க வைப்பதன் மூலம், ஒதுக்கப்பட்ட அந்த நிதி காலாவதியாகிவிடலாம். காலாவதியான நிதி மீண்டும் அரசின் கைக்குச் சென்று விடும். 1987ஆம் ஆண்டுக்குப் முன்பு இவ்வாறு பலதடவை யாழ்-உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி காலாவதியாகித் திரும்பிச் சென்றதை, இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, சிங்கள - பௌத்த துரைத்தன அதிகார வர்க்கத்தைப் பற்றிய சரியான மதிப்பீடும், அதை வெற்றி கொள்வதற்கான சரியான மாற்று வழிகளும் இன்றி எத்தகைய அதிகாரப் பரவலாக்கலும் வெற்றியளிக்கப் போவதில்லை. □

2000 - ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி

சிறுகதை இலக்கியத்துறைக்கு வளமூட்டும் நோக்கோடும், சகல எழுத்தாளர்களையும் — இளம் தலைமுறையினர், எழுதாமல் இருக்கும் பழந்தலைமுறையினர் — ஆகிய சகலரையும் ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திசை தீர்மானித்துள்ளது.

பரிசு விபரம்

முதற் பரிசு	:	750/=ரூபா
இரண்டாம் பரிசு	:	500/=ரூபா
மூன்றும் பரிசு	:	250/=ரூபா
ஆறுதல் பரிசுகள்	:	ஒவ்வொன்றும் 100/=ரூபா வீதம் ஐந்து பரிசுகள்

நிபந்தனைகள்

1) சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும்.
2) இதற்கு முன்னர் வேறு எங்காயினும் வெளியிடப்படாதவையாக இருக்கவேண்டும்.
3) எந்தப் பிரச்சினையையும் மையமாக வைத்து எழுதப்படலாம்.
4) ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனால், கதைகள் ஒவ்வொன்றும் முழுத்தாளில் (பூல்ஸ் கப் தாள்) பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
5) எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
6) போட்டி முடிவு திகதி 3-5-1989
7) சிறுகதைப் போட்டி, ஆசிரியர் 'திசை', 267 பிரதான வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு, கதைகள் அனுப்பப்படவேண்டும்.
8) திசை ஆசிரியருடன் மேலும் இருவர் கொண்ட நடுவர் குழுவின் முடிவே, இறுதியானது.
9) பரிசுக் கதைகளும், தரமான ஏனைய கதைகளும் திசை யில் தொடர்ந்து வெளியிடப்படும். □

அறிவியல் உலகம்

உயர் தொழில்நுட்ப முறையால் மூன்றும் உலக நாடுகளுக்கு ஆபத்து!

மூன்றும் உலகநாடுகள் பலவற்றினதும் தலைவர்கள் நவீன தொழில்நுட்பமுறைகளே தமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரே வழி, சிறந்தவழியென அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் நுண்எலெக்ரோனிக், உயிரியல் தொழில்நுட்பம் என்பவற்றின் பாவனைப் புரட்சியானது மூன்றும் உலக நாடுகளின் இயற்கை வளங்களிற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் ஒரு அறை கூவலாக உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதனை இங்கு காண்போம்.

உயர் தொழில்நுட்பத்தினை எல்லாவழிகளிலும் பயன்படுத்துவதே நாட்டின் அபிவிருத்திக்கான இலகுவான வழியென மூன்றும் உலகநாடுகளின் தலைவர்கள் யாவரும் கொண்டுள்ளனர். மூன்றும் உலகநாட்டு மக்களே எல்லா உயர் தொழில் நுட்ப சாதனங்களிற்கும் பழக்கப்படுத்துவதே 21-ஆம் நூற்றாண்டின் நோக்கமாக இருக்கப்போகின்றது

இதனடிப்படையிலேயே வங்கிகள், அரசியல், விமானத் துறை, என்பவற்றில் நவீன நுண்எலெக்ரோனிக், செய்திப் பரிவர்த்தனைக் கண்டுபிடிப்புக்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் போன்றவை மிகப் பெரிய அளவில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இவற்றுல் பெரிதாக எதனையும் அளித்துவிட முடியவில்லை, ஆனால் தெய்வாதீனமாக இவை மக்களின் உயிர் வாழ்விற்கு அறைகூவலாக உருவாகிடவில்லை. நவீன செய்திப்பரிவர்த்தனை தொழில் நுட்ப கண்டுபிடிப்புக்களால் வறியமக்கள் எதனையும் இழந்துவிட நேரவில்லையாயினும், அவற்றுல் இம்மக்கள் பெரிதாக எதனையும் பெற்றுவிடவுமில்லை.கேள்பது வெளிப்படை ஆனால் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு இயற்றில் நவீன தொழில்நுட்பத்தால் ஏற்படப்போகும் தாக்கம் மிகப்பெரிய இழப்பை கொண்டுவரப்போகின்றது.

இந்த நவீன தொழில்நுட்பமானது —உயிரியல் தொழில் நுட்பம்—நாட்டின் இயற்கை வளங்களிற்கும், வாழ்க்கையின் எதிர்பார்ப்புகளிற்கும் ஒரு பயமுறுத்தலாக அமைவதால் ஏறைமக்களின் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. இவை அணுச்சக்தியிழுல் விளையும் ஆபத்தினைவிட மிக மிக பயங்கரமானவை. மனிதவுடல், தாவரவர்க்கம், மிருகங்கள் என்பவற்றுல் இவற்றின் தாக்கம் வெளித்தெரியாமல் மறைமுகமாகவே நடைபெறுகின்றது.

அணு உலைகள், அணுச்சக்தி சாதனங்களில் ஏற்படும் வெடிப்பு என்பன கண்ணுல் பார்க்கக் கூடியவை. காதால் கேட்கக் கூடியவை. பக்ரீரியா, வைரல் போன்ற நோய்பரப்பும் நுண்கிருமிகளை பரவவிட்டால் அவற்றை கண்ணினுல் பார்க்கவே முடியாது. எந்த வழியிலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. மேலும் அணுக்கதிர்வீச்சானது தானே பெருகிக்கொள்ள மாட்டா. ஆனால் நுண்கிருமிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று இனவிருத்தியடைந்து பெருகிவிடக்கூடியவை. பாரிய ஆய்வுசாலைகளில் உருவாக்கப்படும் இந்த நுண்கிருமிகளின் கண்ணிற்குப் புலப்படாத்தன்மையும்,இனவிருத்தியடைந்துவிடும் இயல்பும் மிகக் கொடிய ஆபத்தினை மக்களிற்குமட்டுமல்லாது மற்றைய உயிரினங்களிற்கும் ஏற்படுத்தக் கூடியன.

அண்மைக்காலத்தில் நிக்கரகுவா நாட்டின் மீது டென்யூவெனும் வைரசை பரவவிட்டதால் தொடர்ச்சியாக பல வருடங்களிற்கு முன்னர் "கைன்ரெக்" எனும் அமெரிக்க உயிரியல் தொழில்நுட்ப நிறுவனமொன்று தாவர எண்ணெயிலிருந்து கொக்கோ பட்டர் பெறும் முறையொன்றிற்கு உற்பத்தியிலைப் பத்திரம் பெற்றது. இதனுல் கொக்கோவை தமது பிரதான ஏற்றுமதிப் பொருளாக கண்டுள்ள கானா போன்ற நாடுகள் ஏற்றுமதி வருவாய்க்குறைவால் பெரும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளன.

'யூனிலிவர்' நிறுவனம் செயற்கை திருணவெண்ணையை (ஒரு மரத்திலிருந்து பெறப்படுவது) தயாரிக்கத் தொடங்கிவிட்டது. இது தென்கிழக்காசியாவில் இவ் வெண்ணைக்கான பயிர்ச்செய்கையில் இயப்பினுல் மக்களின் உழைப்பில் மண்ணாயிருள்ளது. செயற்கை முறை தயாரிப்பிற்கு வேண்டிய இரசாயனப் பொருட்களும், நிர்வாகத் திறமையும் இல்லாத காரணத்தால் இம்மக்கள் அம்முறையை பின்பற்ற முடியவில்லை. அமெரிக்காவிலுள்ள பல தொழில் நிறுவனங்கள் நவீன தொழில் முறைகளை பின்பற்றி செயற்கை வலிமாலை தயாரிக்கின்றன. இதனுல் உலகின் முக்காவ் பங்கு வலிமாப்பயற்றுச் செயற்கையிலிருபட்டுள்ள மடகஸ்கார் நாட்டின் 700 000 மக்கள் தம் வருவாயை இழக்க வேண்டிவரும். இப்பயற்றுச் செய்கை வருடாந்தம் 520 இலட்சம் அமெரிக்க டொலர்களை அந்நாட்டிற்கு ஈட்டித்தந்துகொண்டிருந்தது.

இந்தியாவில் விம்கோ, டாடா போன்ற பாரிய நிறுவனங்கள் உயர் தொழில்நுட்ப உற்பத்தியினும் பெயரில் பயிர் செய்யப்படாத கிராமப்புறக் காணிகளை கொள்வனவு செய்கின்றன. இந்த உயர் தொழில் நுட்பமானது மக்களால் பன்னெடுங்காலமாக காப்பாற்றப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டுவந்த பாரிய நிறுவனங்கள், நவீன தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு கொள்ளைநோய் தடுப்பை தமது ஏகோபித்த கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து தம் வருவாயை பெருக்குகின்றன. கொள்ளைநோய் தடுப்பு மருந்துகளிற்கு பொருத்தமான பயிரினங்களை கண்டறிந்து அவற்றின் ஏக விநியோகஸ்தராகவும் தம்மை ஆக்கிக் கொள்கின்றன. இதனுல் விற்பனை வருமானம் பன்மடங்கு பெருக்கப்படுகின்றது.

நவீன தொழில்நுட்பமானது மாற்று வழி முன்னேற்றங்களை தடுத்து ஒரு மயக்க நிலையை உண்டாக்கியுள்ளது. பெருமளவு காணி நிலங்களையும், இயற்கை உற்பத்தி வளங்களையும் ஒருசில நிறுவனங்களே அபகரித்துக் கொள்ள வழி சமைத்து மாற்று முன்னேற்றவாய்ப்புக்களை குறுகியதாக்கியுடுகின்றது.

முடிந்த முடிவாக, இந்த நவீன தொழில்நுட்பமானது, உலகின் உற்பத்தி வளங்களின் பெரும்பகுதியை ஒருசில சர்வதேச நிறுவனங்களின் உற்பத்திப்பொருட்களாக மட்டுமே மாற்றிவிடும் இயல்பினது.

21 ஆம் நூற்றாண்டில் உலகில் ஆக மொத்தம் ஐந்து பாரிய நிறுவனங்களே விவசாயத்திற்கு வேண்டிய எல்லா மருந்துகளையும், விதைவகைகளையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கும். இவ்வாறு அவை உலகின் விவசாயத்தை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து விடும்.

பாரிய நிறுவனங்கள் யாவும் இயற்கைவளங்களை இயன்றமட்டும் தமது லாபமீட்டும் பொருட்களாகவே மாற்றிவிட முனைந்து நிற்பதால் சாதாரண மக்களிற்கு வேண்டிய இயற்கை ஆதாரப் பொருட்கள் தட்டுப்பாடானவையாகிவிடும் 21ஆம் நூற்றாண்டில் நவீன தொழில் நுட்பங்காரணமாக மனிதனின் வாழ்க்கை முறையும், அவனின் தேவைகளும் உருமாறிவிடலாம்.

அண்மையில் ரஜீவ் காந்தியின் வரவு செலவு திட்ட பரிந்துரைப்படி ஒருவித குடிபானம் (Pepsi) உற்பத்தி பண்ணக்கூடிய தக்காளியினத்தை பெருமளவில் பயிர்செய்கை பண்ணுவது. இந்தியமக்களின் பசிக்கொடுமையைக் குறைக்க உதவாது. மாறுக இயற்கை உற்பத்தி வளங்களையும், நிலங்களையும் வறிய மக்களின் கைகளிலிருந்து பிரித்து விடுவதனுல் வறுமையின் அளவை அதிகரிக்கவே உதவும்.

மொத்தத்தில் நவீன தொழில்நுட்பமானது சாதாரண மக்கள் சமுதாயத்திற்கும், பெரிய வியாபார அமைப்புகளிற்கும் இரண்டு வேறுபட்ட பலாபலன்களையே கொடுக்கின்றது. அதாவது 21 ஆம் நூற்றாண்டானது ஏழைமக்களிற்கும், பணக்காரவர்க்கத்திற்கும் மிக மிக மாறுபாடானதாகவே அமையப் போகின்றது.

நன்றி: நோர்ட் வேல்ட் நெற்வேக்
ஸ்வீச்சர்ஸ் □

ரஜனி கோத்தாரி

தமிழில்
க. குமாரவினுயகம்

கிஸ் அன்ட் எயிட்ஸ்

இருதய நோய்க்கு, கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு அதிசய மருந்து பற்றிய கருத்தரங்கு ஒன்று இந்திய இருதய மன்றத்தினுல் நடத்தப்பட்டது. இதில் இந்துறையில் ஈடுபட்டுள்ள 50 பேர்வரை கலந்துகொண்டனர். பலர் நீண்ட நேரம் பேசினர். இதனுல் வெறுப்படைந்த சிலர் தம் அதிருப்தியை வெளிப்படுத்தினர். இதை உணர்ந்த டொக்ரர் கே. ஜி. நாயர் என்பவர், ஒரு அர்த்தமுள்ள புன்னகையுடன் மேடைக்கு வந்தார். நான் சுருக்கமாக கிஸ் (Kiss) முறையைப் பின்பற்றிப் பேசுவேன் என்றார். அப்படியே செய்தார். (Keep it Short and Sweet என்பதையே அவர் Kiss எனக் குறிப்பிட்டார்).

அடுத்து வந்த பேச்சாளர் டொக்ரர் எஸ். பி. முன்ஷி என்பவர் சொன்னார்

"நான், எனக்கு முன் பேசியவர் கொள்கைக்கு எதிரானவன். இது எயிட்ஸ் (AIDS) யுமம். ஒரு முத்தம் எங்கு கொண்டுபோய் விடும் என எல்லாருக்கும் தெரியாது. எனவே இப்போதைக்கு நாம் முத்தமிட வேண்டாம். (Let us not kiss)".

— கண்ணன் O

"எனது கடப்பாடு சுதந்திரத்திற்கும், நேர்மைக்கும்தான்"

உலகக் கவிதைத் திருவிழா!

"போபால் இன்னமும் துக்கம் அனுஷ்டிக்கிறது. துக்கம் அனுஷ்டிக்கும் ஒரு நகரம் கலாசாரத் திருவிழாக்களில் 'விலையாட' முடியாது!''

உலகக் கவிதைத் திருவிழா நடந்த போபால் நகரின் பாரத் பவன் கட்டிடத்திற்கு அண்மையில், நிலக்கடலை விற்றுக் கொண்டிருந்த ஒரு சிறுவர், அவ்வாறு சொன்னார். ''கவிதைத் திருவிழா ஆரம்பமான நாளன்று, பாரத் பவனிற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்திய சிறு குழுவில், நானும் இருந்தேன்'' என, அவர் மேலும் கூறினார்.

ஆனால் ஒரு சிறுமையாக (ஜனவரி 11—17), ஒவ்வொரு நாளும் பல மணித்தியாலங்களை, உலகின் புகழ்பெற்ற சமகாலக் கவிஞர்களைச் செவிமடுப்பதில் செலவழித்த பலருக்கு, அது கவிதைக்குரிய நேரமாய்த்தான் இருந்தது.

ஒவ்வொருநாளும் கவிதை வாசிப்பு காலை 9.30 மணிக்குத் தொடங்கிற்று. மதிய உணவிற்கான ஒய்விற்குப் பின்னர், தொடர்ந்து நள்ளிரவு வரை அது நடந்தது.

இத்திருவிழாவில் பங்குபற்றிய கவிஞர்கள் சிலருடன் நிகழ்த்திய செவ்வியிலிருந்து, சில பகுதிகள் தரப்படுகின்றன.

முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தில் ஒரு காலத்தில் முக்கிய உறுப்பினராக இருந்த

உருதுக் கவிஞர் அக்தர்—உல்—இமன், சிறிய உரையாடலின்போது பின்வருமாறு சொன்னார்: "இடது சாரிகள் நவிவுற்றமை 'கருத்துநிலை வெற்றிடத்தை' உருவாக்கியுள்ளது. அதனால், வெளிப்படையான அரசியல் அறிவிப்புகளைக் கவிஞர் செய்யமுடியாதுள்ளது. அமைப்புகள் கவிதைகளில் செல்வாக்குச் செலுத்த முடியும். எங்கள் நாட்டில் இடதுசாரி அமைப்பு பெரிய அமைப்பாக இருந்தால், காத்திரமான எழுத்துக்களில் செல்வாக்குச் செலுத்தியது. ஆனால் இடதுசாரி அமைப்பு இப்போது தளர்ச்சியுற்றுவிட்டதால், இலக்கிய வெளிப்பாடுகள் மிகவும் தன்னிலைப்பட்டதாக (Personal) மாறிவருகிறது.'' எந்த இலத்தையும் தான் வரித்துக்கொள்ளவில்லை யென்றும், மனிதனின் அவலத்தையே எழுதுவதாகவும் சொன்ன அவர், மேலும்சொன்னார்: ''நிலவேனை களில், யாருக்கு, என்னத்தை எழுதுவது என்ற உணர்வு ஏற்படுகிறது.''

நிக்கரகுவாவின் முன்னணிக் கவிஞனும், அந்நாட்டின் கலாசார அமைச்சராயுமுள்ள ஏர்னெஸ்றோ கார்தினல், கவிஞர்கள்தான் நிக்கரகுவாவில் புரட்சியைச் செய்தார்களென்று சொன்னார்.

''புரட்சி கவிதையாக இருக்கிறது; கவிதை புரட்சியாக இருக்கிறது.'' என்று குறிப்பிட்ட அவர், தனது காதல் கவிதைகள் கூட அரசியல் தான் என்றும் கூறுகிறார். கத்தோலிக்க மதகுருவான அவர், எப்படிப் புரட்சிகரக் கவிஞனாக மாறினார் என்று கேட்டதற்கு, அவர் சொன்னார்: "மதத்திற்கும் புரட்சிக்குமிடையே எந்தவித முரண்பாடும் இருக்கவில்லை.''

கபிரியேல் ஓகாரா

நைஜீரியா

O கருத்துநிலை (Ideology) ரீதியாக நீங்கள் எங்கு நிற்கிறீர்கள்?

□ இறுக்கமான கருத்துநிலைப் பிரிவுகள் நைஜீரியாவில் இல்லை. தீவிரவாதக் கவிஞர்களைப்போல், வலதுசாரிகளும் இருக்கிறார்கள். நான் ஒரு நடுநிலையாளி. எப்போதும் நடுவழி கண்டு செல்வது முடியக்கூடிய ஒன்றெனவே, நினைக்கிறேன். உண்மையில், அதன் பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்; நான் எப்போதும் தயாராகவே உள்ளேன்.

O உறுதியான நிலையொன்றை எடுக்க, ஏன் தயங்குகிறீர்கள்?

□ சித்தாந்தத்துக்கு நான் எதிரானவன். தூய கொம்யூனிஸம் இல்லை — ரஷ்யாவில் என்ன நடந்ததென்று பாருங்கள். தூய முதலாளித்துவம் உண்டா?—'அமெரிக்க வகை' யிலும் அது இல்லை. நீங்கள் எந்தநிலையை எடுத்தாலும், தவறு விடும்போது அதை ஒப்புக்கொள்ளக் கூடிய நேர்மை இருக்கவேண்டுமென்பதே, முக்கியமானது. தனது தவறுகளை ஒப்புக்கொண்டு, தேவையானால் நிலைப்பாடை மாற்றக்கூடியவனே, ஒரு நல்ல புத்திஜீவி.

O 'எதிர்ப்புக் கவிதை' இன்றும் உங்கள் நாட்டில் எழுதப்படுகிறதா?

□ முன்பு அது காலவித்துவத்துக்கு எதிராக இருந்தது: இப்போது நாங்கள் எமது அரசாங்கத்தை, அதிகாரவர்க்கத்தை, இவை போன்றவற்றை எதிர்க்கிறோம். கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் எமது புதிய அரசியலமைப்பில் எழுதப்பட்டிருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

O நைஜீரியக் கவிதைகளில் நீக்ரோயிஸம் (Negritude) என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

□ அதிக முன்னேற்றத்தை அது தரவில்லை. ஆனால், எமது 'வேர்களைப்' பற்றிய விழிப்புணர்வை அது எம்மில் ஏற்படுத்தியிருப்பது, முக்கியமானது. நமுப்புக் கலாசாரம் என ஒன்று இருக்கிறது. இக்கலாசாரம் இலக்கியத்துக்கூடாக வெளிப்படுத்தப்பட வேண்டும்; எங்களுக்குரிய பங்கை நாங்கள் செய்கிறோம். ஆனால் இறுதியில், நல்ல இலக்கியம் என்பது எல்லோருக்கும் பொதுவானது.

டபிள்யூ. எஸ். றென்ட்ரு

இந்தோனேஷியா

O உங்கள் கவிதை பற்றி என்ன சொல்கிறீர்கள்?

□ நல்ல கவிதை? (சிரிக்கிறார்.)

O உங்கள் கருத்து நிலை என்ன?

□ நான் இடதுசாரியோ வலதுசாரியோ அல்ல. அரசியல்வாதிகளிடமிருந்து பொறுப்புணர்வை நான் எதிர்பார்க்கிறேன். கவிஞன் அரசியல் மீது செல்வாக்குச் செலுத்துபவனாக இருக்கவேண்டுமேயாயுமிய, அதனால் செல்வாக்குக்கு உட்படுபவனாக இருக்கக் கூடாது என்பது, எனது உறுதியான நம்பிக்கை.

O நீங்கள் எழுதும் கவிதைகளால் உங்களிறகு ஏதும் பிரச்சினைகள் ஏற்பட்டதா?

□ ஓம். ஓம். 1978—1985 வரை நான் தடைசெய்யப்பட்டேன்: ஏனென்றால் எனது கவிதைகள் அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை. நல்ல கவிதை நேர்மையானதாகவும், சரியான மதிப்பீடுகளை வரித்துக் கொண்டதாகவும் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

O சரியான மதிப்பீடுகள்என்றால் என்ன?

□ நல்லது.அடிப்படை மனிதமதிப்புகளே சரியான மதிப்பீடுகளை உருவாக்குகின்றன. எனது கடப்பாடு சுதந்திரத்துக்கும், நேர்மைக்கும்தான்.

O அதிகளவில் நீங்கள் எழுதுகிறீர்களா?

□ ஆறு தொகுதிகளை நான் வெளியிட்டுள்ளேன். அதில் ஐந்து ஆங்கிலத்திலும், ஒன்று ஜோமலாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஸ்ரீபன் ஸ்பென்டர்

இங்கிலாந்து

O உங்கள் கவிதைக்கென்று வரைவிலக்கணம் உண்டா?

□ ஓம். முன்பு தெளிவான வரைவிலக்கணம் இருந்தது.

தமிழில்:
அ. யேசுராசா

ஆனால் இப்போது அதனைக் கைவிட்டுவிட்டேன்.

O அடிப்படைகளை மாற்றியமைத்தல் என்பதிலிருந்து 'புலன்கடந்த நுண்பொருள் ஆய்வுக்கு (Metaphysics) மாறிவிட்டீர்கள். அரசியல் கவிதை எழுதுவதை ஏன் நிறுத்திவிட்டீர்கள்?

□ வேலையின்மை, ஏழ்மை பற்றி எழுதுவதில் முன்பு சந்தோஷப்பட்டேன். ஆனால் துன்பங்கள் அதிகரித்துச் செல்வதில், வறுமையைப் பற்றி மட்டும் எழுதுவது இழிவானதாகத் தெரிகிறது. துன்பங்களைப்பற்றி எழுதுவதற்கு நீங்களும் துன்பப்படவேண்டும். ஆனால் நிகழ்ச்சிப் போக்கில் நீங்களும் அழிவீர்கள். நச்சுப் புகை அடுப்பினுள் வீசப்படவுங்களுக்கு நேர்கையில் மாத்திரமே, நச்சுப் புகைக்கூடத்தினுள் வீசப்படுவதால் வரும் துயரங்களை உங்களால் உணர்ந்துகொள்ள முடியும். ஆனால், அப்போது அது நாமதமானதாகிவிடும். அதனால்தான் அரசியல் கவிதை எழுதுவதை நிறுத்தினேன். குறித்த சில சூழ்நிலைகளிலேயே அது எழுதப்படமுடியும்.

O மற்றவர்களின் எழுத்துக்களால் நீங்கள் பாதிப்பிற்குள்ளாகிறீர்களா?

□ நீங்கள் அதிக அளவில் வாசிக்கலாம்; அதன்மூலம், முடக்குநிலையிலிருந்து மீளலாமென நினைக்கக்கூடும். ஆனால், உங்களின் 'சொந்தக் கவிதை'யையே நீங்கள் எழுத வேண்டும்.

செசார் லோப்ஸ்

பியூபா

O சோஷலிச நாடுகளின் இலக்கியங்கள், 'சோஷலிச யதார்த்தவாதம்' என்ற கருத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகி வந்துள்ளன? பியூபாவில், உத்தியோக பூர்வமான இலக்கியக் கருத்துநிலை என்ன?

□ சோஷலிச யதார்த்தவாதத்துடன் தான் இணைந்திருப்பதாகக் கருதிக்கொள்ளும் எந்த எழுத்தாளனும் கவிஞரும் ஒரு சோஷலிசவாதியோ, யதார்த்தவாதியோ அல்ல. சோஷலிச யதார்த்தவாதம், இலக்கியத்துக்குப் பெருந்தீங்கைச் செய்துள்ளது. இன்று அத்தகைய உத்தியோகபூர்வமான சித்தாந்தமேதும் இல்லை. நாங்கள் புரட்சிக்குக் கடப்பாடுடையவர்கள். அதன் அர்த்தம், வரட்டுத்தனமாக மார்க்சியத்துக்கு நாங்கள் இணக்கம் தெரிவிக்கவேண்டுமென்பதல்ல. எமது பார்வைகளை வெளிப்படுத்த எமக்குச் சுதந்திரமுண்டு. ஆனால் புரட்சியினைத் தாக்கவோ அழிக்கவோ அனுமதிக்கப்படமாட்டோம்.

O பியூபாவின் அரசாங்க நிறுவனங்களிற்குப் பிடித்தமில்லாத கருத்துக்களைக் கொண்டிருப்பதற்காக, எழுத்தாளர் பலர் சிறையிலிருப்பதாகத் தெரிகிறது. இதுபற்றி ஏதாவது குறிப்பு.....?

□ ஓம். மக்களில் சிலர் சிறையிலிடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள், கவிஞர்கள் எழுத்தாளர்கள் என்பதற்காகவல்ல. எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளுக்காக, அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருக்கிறார்கள். தற்செயலாக அவர்களிற் சிலர், கவிஞராகவோ எழுத்தாளராகவோ இருக்கிறார்கள். பியூபாவில் தணிக்கைமுறை இல்லை. ஆனால் சில விமர்சகர்கள், சிலவேளை உங்கள் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், புரட்சியை நீங்கள் தாக்குவதாக நினைக்கலாம். இவ்வாறு எனக்கும் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. ஆனால் அத்தகைய நிலை இன்று இல்லை. வெளியிலிருந்து எதிர்நோக்கிய அச்சுறுத்தல்களுக்கு புத்திஜீவிகளே காரணம் எனச், சிலர் கருதியதின் பிரதிபலிப்புத்தான், அத்தகைய நிலை

O ஒரு கவிஞன் என்ற முறையில் உங்களுடைய கடப்பாடு என்ன?

□ தனது சொந்தக் கடப்பாடுபற்றிய கருத்தினைத் தெரிவதற்கு, ஒவ்வொரு கவிஞனுக்கும் சுதந்திரம் இருக்கவேண்டும். எனது கடப்பாடு 'வேர் நிலை'க்குத் தான். 'வேர்' என்பது மனிதன். ஒரு நல்ல கவிஞன் மனித கௌரவத்திற்குக் கடப்பாடுடையவனாக இருப்பான்.

O உங்கள் கவிதைகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

(11ஆம் பக்கம் பார்க்க)

கபிரியேல் ஓகாராவின்
கவிதை

நாரைகள்

அமைதியான வானில் வெள்ளைத்துகள்களாக
நாரைகள் பறந்து வருகின்றன,
தங்கள் கூடுகளை அமைக்கத் தகுந்த
வெப்பதிலை தேடி வடக்கு நோக்கிச் சென்றுவிட்டு
நாரைகள் வருகின்றன.

காற்றின் ஆன்மாக்களான நாரைகள்
இப்போது என்னுடன் உள்ளன.
இறைவனின் தூதுக்கும் கரங்களையும் மீறி
உள்ளுணர்வின் வழிகாட்டலில்
அவை,
வடக்கு, மேற்கு, கிழக்கு என்று திரிகின்றன.
ஆனால், நான்
இறைவனின் கட்டளைப்படி
இந்த மலைகளின் மேலேயே அமர்ந்திருக்கிறேன்.
கதிரவன் எழுவதிலிருந்து விழுவது வரையிலும்
நாரைகள் வருவதையும்
போவதையும் பார்த்துக்கொண்டு
உள்ளே தூண்டும் ஆசைகளுடன்
இங்கேயே அமர்ந்திருக்கிறேன்.
வேட்கை
ஒரு சிவப்பு ஊருணியாகச் சுரக்கிறது.
அதில் எழும் ஒவ்வொரு நீர்க் குமிழியும்
உள்ளுணர்வின் தட்டமுடியாத ஓர் அழைப்பாகிறது-
கோடிக் கணக்கான அணுக்களினுள்
சிறைப்பட்டிருக்கும்
ஆசையின் குரல்.
ஓ! இறைவா,
என் பகல் பிரார்த்தனைகளின் மணியோசையை
நீ கேட்க மாட்டாயா?

எனது நாரை
கருப்புத் தோலுக்குள்ளும்
கருகிச் சுருண்ட தலைமுடிக்குள்ளும்
சிறைபட்டுக் கிடக்கிறதே!

தமிழில்: இந்திரன் □

உமா வரதராஜனின்
கவிதை

இறங்கிப் போனவள்

நீ என் முகத்தில்
இன்னமும் உமிழாமல் இருப்பதற்கும்
விடிகாலை மலரை
நினைவில் கொணர்ந்த
உன் புன்னகைக்கும் கோடி நன்றிகள்.

மாரியின்
இருள் வான் பரப்பில்
ஒரீரு வெள்ளிகளைத் தேடியா
அல்லது
ஆகாயத்தில் அலைக்கழியும்
ஒரு காற்றுடியின் நூல்முனை
உன்கரத்தில் உள்ள நம்பிக்கையிலா
அப்படி அண்ணாந்து பார்க்கிறாய்?

நான் எங்கு செல்வேன்
என்று எனக்கே தெரியாது.
என்னிடம் போய்
ஒரு வெள்ளாடாய் வழி கேட்டாய்.

ரயிலில் நான் இருந்தேன்.
நீ இறங்கிக் கொண்டாய்.
மழைத் தூறலிடையே
இருள் உன்னை விழுங்கிக் கொள்ள
ரயில் என்னைச் சுமந்து சென்றது.

* தேவபுரத்தில் நாம் பிரிந்தோம்.

தேவபுரம்: ஒரு ரயில்நிலையம். □

த டெல்ரா ஃவோஸ்

ஏகாதிபத்தியத்தின் கட்டுக்கதை

பலஸ்தீன தேசத்தையும் பலஸ்தீன தேசியப் பேரவையையும் ஐக்கிய நாடுகள் சபையும்; சர்வதேச நாடுகளும் அங்கீகரித்து வருகின்றன என்பது இன்றைய உலகின் முக்கியமான செய்தியாகும். தற்போது, யாழ். நகரில் திரையிடப்பட்டுள்ள ''த டெல்ரா ஃவோஸ்'' (The Delta Force) எனும் அமெரிக்கத் தயாரிப்பான ஆங்கிலப் படம் பலஸ்தீன மண்ணின் எழுச்சியையும், மனிதாபிமானத்தையும் குழிதோண்டிப்புதைக்கும் நிகழ்வாக, சினிமாவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய இருவர் விமானம் ஒன்றைக் கடத்துகின்றனர். பின்னர், கடத்தப்பட்ட விமானத்தையும் கடத்தியவர்களின் கோஷ்டியினையும் நிர்மூலமாக்குகிறது. அமெரிக்க இராணுவம், இவ் இராணுவப் பிரிவுதான் 'த டெல்ரா ஃவோஸ்' ஆகும். சினிமாவின் மூலம் வரலாற்றை மறைக்கும் பிற்போக்குக் கலாசார வாதிகளின் நிட்டமிடப்பட்ட செயலேஇத்திரைப்படமாகும். திரைப் படத்தைப் பார்த்தவுடன் உணர்ச்சிகர ரசிப்புமிக்க 'நம்மவர்கள்' புகழ்பாடுவார்கள். ஆரவாரித்துக் கைதட்டுவார்கள். ஆனால் ஒரு மண்ணின் போராட்டம் பரம்பரையின் உணர்வுகள் சூனியமாக்கப்பட்டு, நாசமடைகின்றன என்பதை எண்ணும்போது, மனம் நெகிழ்கின்றது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் (P, L. O) நியோவிசத்தால் சிதைமுக்கப்பட்டபோதும், அமைப்பால் வேறுபட்டிருப்பினும், கருத்தால் — கொள்கையால் ஒற்றுமைப்பட்டிருக்கும் Popular Front of Liberation Palastine (P. F. L. P) இன் துணையான ''புது உலகப் புரட்சியாளர்கள்'' (N. W. R) எனும் அமைப்பினால் நிகழக்கூடிய நகரான ஏதென்ஸ் இலிருந்து, 1985 ஜுலை 17 இல், அமெரிக்க விமானத்துறை நிறுவனத்தின் 'அமெரிக்க ட்ரவல்ஸ்வே' எனும் விமானம், நியூயோர்க்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது கடத்தப்படுகின்றது. விமானக் கடத்தல் மனிதாபிமானமற்ற செயலாக இருப்பினும், சொந்த மண்ணின் போராட்டை எழுச்சிக்காகக் கடத்தப்படும்போது அதனை எவருமே தவறு எனக் கருத முடியாது. விமானத்திலிருந்த 247 பிரயாணிகளில் முக்கால் பங்கினர், அமெரிக்கர்கள் ஆவர். உல்லாசப் பயணங்களை முடித்துவிட்டு உல்லாசமாகச் சென்றுகொண்டிருந்த அமெரிக்கர்களே இப் பிரயாணிகள், தன் நாட்டு மக்களின் உயிர்காக்க 'றேகன்' அரசாங்கம் கொதித்தெழுந்த வண்ணமிருந்தது. விமானத்தைக் கடத்திய 'புது உலகப் புரட்சியாளர்கள்' பின் வரும் கோரிக்கைகளை அமெரிக்காவிடமும் இஸ்ரேலிடமும் முன்வைத்தனர்.

□ இஸ்ரேலிய இராணுவத்தால் கைதாகிச் சிறைவைக்கப்பட்டுள்ள 'புது உலகப் புரட்சி' யாளர்களையும் அனைத்து பலஸ்தீனர்களையும் நிபந்தனையற்று உடனடியாக விடுவித்தல் வேண்டும்.

□ பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 'காசா' மேற்குக்கரை பிரதேசங்களிலிருந்து இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும்.

□ சுதந்திர பலஸ்தீனத்தின் இறைமையை அச்சுறுத்தும் எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கும், சியோனிஸ்டுகளுக்குமான உதவிகளை அமெரிக்கா உடனடியாக நிறுத்தல் வேண்டும்.

17 ஜுலை 1985 இல் ஏதன்சிலிருந்து புறப்பட்ட விமானம் திசைதிருப்பப்பட்டு, அடுத்த நாள் பெய்ரூட்டில் தரை இறக்கப்படுகின்றது. இராஜாங்க ரீதியில் எதிர்ப்புரட்சிகர வாதிகளுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடாத்திய முயற்சி, வெற்றியளிக்கவில்லை. ஏகாதிபத்தியத்தின் அகங்காரச் சின்னமாகிய 'ரொனல்ட் றேகன்' தனது அடக்குமுறை வக்குரோத்தை 'புது உலகப் புரட்சியாளர்களி'ன் மேல் இராணுவரீதியாக ஏவினார். இவ் இராணுவப் பிரிவுதான் சினிமாவில் 'டெல்ட்ரா ஃவோர்ஸ்' ஆக சாகசங்களை நிகழ்த்துகின்றது.

சார்ல்ஸ்

ஏகாதிபத்தியத் தயாரிப்பான 'டெல்ட்ரா ஃவோசை' தசை முறுக்கேறிய ஆண்சிங்கங்கள் 'சக் நொறிஸ்', 'லீ மார்வின்' போன்ற ஹீரோக்கள் திரையில் கதிகலங்க வைக்கின்றனர். ரசிகப் பெருமக்களின் ஆரவாரங்களுக்கு உட்படுவதுடன் மனதில் ஆழமாகவும் பதியவைக்கின்றனர். தயாரிப்பாளர்கள் வெகு இலாவகமான திரைப்படத்தை நகர்த்தித் சென்றுள்ளனர். ஏகாதிபத்தியத்தின் கொடூரங்களை மறைக்கு மளவிற்கு புரட்சியாளர்களின் சித்திரவதைகள் மேலோங்கியுள்ளதாகக் காட்டப்படுகின்றது. ஆனால் போராட்ட வரலாற்றையே மழுப்பும் வஞ்சகம் மிக்க நீசர்களை வரலாறு ஒருபோதும் மறக்கமாட்டாது.

வியத்நாமிய தேச விடுதலைப் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்ட மாபெரும் தோல்வியும், சுமக்க முடியாத இழப்புக்களையும் அமெரிக்க மக்கள் மனதிலிருந்து அகற்றுவதற்காகவும் வியத்நாமிய போராட்டத்தை வரலாற்றாரீதியாக மழுங்கடிக்கவும் பல்வேறு மொழிகளிலும் 'ரம்போ' திரைப்படம்தயாரிக்கப்பட்டுள்ளது. வியத்நாமிய போராட்ட வரலாற்றை மாத்திரமல்ல ... நியூயா, எல்சல்வடோர், நிக்கிரகுவா புரட்சிகளைத் தனக்குச் சாதகமாக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்று வருகின்றது. தற்போது பலஸ்தீனத்தின் எழுச்சியையும், வெற்றியையும் ஜீரணித்துக் கொள்ள முடியாத அமெரிக்க அரசும், பணமூட்டை சுமக்கும் வெறிபிடித்த தயாரிப்பாளர்களும் புரட்சிகர வரலாற்றையே மாற்றியமைத்துவிட்டனர். இது ஓர் வரலாற்றுப் படுகொலையாகும்.

'த டெல்ரா ஃவோர்ஸ்' இல் அமெரிக்க இராணுவம் புது உலகப் புரட்சியாளர்களை நிர்மூலமாக்கும் கற்பனுவாதத்துக்குட்பட்ட காட்சிகளும் நிறைந்துள்ளன. தனி மனிதன் (ஹீரோ) பலரைச் சமாளிப்பது போன்றது. தென்னிந்திய தமிழ்த் திரைப்படத்தை மிஞ்சும் அளவிற்கு, இராணுவ சாகசங்களும் நிறைந்துள்ளன. உண்மையில் அமெரிக்க இராணுவம் இக்கால வேளையில் செய்ததுதான் என்ன?

புது உலகப் புரட்சியாளர்கள் கடத்திய விமானத்தை எதிர்ப் புரட்சியாளர்களுடனும், இஸ்ரேலிய இராணுவத்துடனும் இணைந்து அமெரிக்க இராணுவம் (விமானத்தை மாத்திரம் – கடத்தியவர்கள் தப்பிவிட்டனர்) 'ரீட்கின்றது. ஜுலை 1984 இல், அமெரிக்க இராணுவத் தளம் பெய்ரூட்டில் புரட்சியாளர்களின் தாக்குதலுக்கு உட்பட்டபோது, 240 அமெரிக்க இராணுவ வீரர்கள் கொல்லப்படுகின்றனர். வியத்நாமிய இழப்பைமறைக்க 'ரம்போ' போல் இங்கும் 'டெல்ரா ஃவோஸ்' எழுகின்றது.

இது தற்போது யாழ்நகரிலும் திரையிடப்பட்டுள்ளது. கொழும்பில் ஐம்பது நாட்கள் மேல் ஓடி இலாபத்தை ஈட்டியது. இங்கும் இருவார காலமாக கலகலப்பாக ஓடியவண்ணமுள்ளது. இராணுவ சாகசங்களையும், ஆயுதப் பாவிப்புகளையும் நமது இளைஞர்கள் நன்றாக ரசிப்பார்கள் போலும்! ஆயினும், உண்மை வரலாற்றை கொச்சைப்படுத்தும் ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் வெளிப்படுகின்றது.

சிதைந்த வாழ்வில் இழந்த வசந்தங்களை மீளப்பெறப் போராடும் பலஸ்தீனர்களின் கடந்த கால வரலாறு, பொய்மையாக்கப்பட்டதை எண்ணும்போது, மனம் நெகிழ்கிறது. □

□ நன்மை வருமா?
நம்பிக்கை இல்லை
துன்பம் வருமோ?
துணுக்குறல் இல்லை
பாதையில், துணையோ
பேச்சோ, குரலோ,
காதொடு காதாய்க்
குலவவோ இல்லை.
வீடில்லை. ஒய்ந்த
தலையைச் சாய்க்கக்
கூடில்லை. என்னால்,
என்னதான் உண்டோ?
எதுவும் இல்லை.
எல்லையில் வானமும்
பதைக்கும் உன் சிறை
இரண்டுமே உண்டு.
பறவையே, இது கேள்;
பதறி விழாதே
சிறைகச் சுருக்கிச்
சிதைந்து அழியாதே.

— கவியரசர்
ரவீந்திரநாத் தாகூர் □

இசையின் சிறுகதை

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும், மறுமலர்ச்சிக் குழுவைச் சேர்ந்தவருமான அ. செ. முருகானந்தன், இச் சிறுகதையை எழுதியுள்ளார். நவஜீவனம் (1951 – 52) என்பதில், இக் கதை முதலில் வெளிவந்ததாகத் தெரிகிறது. புகையில் தெரிந்ததும், மலித மாடு ஆகிய இரு நூல்கள், அ. செ. மு. வின் நூல்களாக இதுவரை வெளிவந்துள்ளன.

தான் அவைகளும் பிறந்தன. உடலின் வலுவைப் பிழிந்து உழைத்த இந்தனை காலத்திலும் காளிமுத்துவுக்கு மிஞ்சிய தேட்டம் — சம்பாத்தியம் — இதுதான் : ஐந்து ஜீவன்கள் கொண்டதொரு பெரிய குடும்பம்.

இந்தக் குடும்பப் பளுவோடும் தளர்வடைந்த கைகளோடும் இனிமேல் இந்தியாக் கரைக்குப்போய் அவனால் என்ன செய்ய முடியும்? பின்னே குட்டிகளின் வருங்காலத்திற்குத் தான் அங்கு எந்த வழியை வகுப்பது?

ஆகவே,பிரஜாவுரிமை பெறுவதற்கான மார்க்கத்தைக் காளிமுத்து நேடத் தொடங்கினான். இதற்காக அங்குமிங்கும் சிந்தனைகளும் ஆசைகளும் உண்டாயின. தேயிலைக் காட்டுக்குள்ளே உரிமையற்ற அநாமதேயமாக அவனது பிரேதம் புதைக்கப்படுவதை நினைத்தாலும் அவனது மனம் சற்றே வேதனைப்படத்தான் செய்தது. இத்தனை காலமாக வாழையடி

தேசியஇனப் பிரச்சினைக் கதை

களை ஒரு சமயம் மண்ணுக்குள்ளே புதைத்து வைத்திருக்கிறானோ? பைத்தியக்காரன்' என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

அரசமரத்தின் அடிப்பாகமும் வெளியே கொண்டுவரப் பட்டாயிற்று. நிலத்தில் மூன்று முழ ஆழத்துக்கு மேலே காளிமுத்து டெங்கு தோண்டிவிட்டான். மேலும் தோண்டிக்கொண்டே போனான். பதிவு உத்தியோகத்தர்கள் சற்றே பொறுமை இழந்தார்கள். "யாருக்கப்பா கன்றுக் கிளைகளின் மீது உட்கார்ந்தார்கள்.

இருந்தாற்போலிருந்து காளிமுத்து துள்ளிக் குதித்தான்.

"இதோ அத்தாட்சி கிடைத்துவிட்டது. நாள் இலங்கையின் பிரஜை. அதற்கு இதைவிட இன்னும் என்ன அத்தாட்சி கேட்கிறீர்கள்?" என்று எங்கோ கிணற்றுக்குள் இருந்து வருவதுபோல அவனது குரல் கேட்டது. அதைத் தொடர்ந்தாற்போல மண் பிடித்த பொருளொன்று வெளியே உத்தியோகத்தர் முன்பாக வந்து விழுந்தது. அவர்கள் ஆவலோடு ஒடிப்

காளிமுத்துவின் பிரஜா உரிமை

அ.செ.முருகானந்தன்

இலங்கையின் சமூகப் பொதுவாழ்வில் காளிமுத்து பிரமாத சேவைகள் புரிந்துவிட்டதாக அப்படி ஒன்றும் பிரமாதப்படுத்தவில்லை. அதனால் இலங்கையின் கௌரவப் பிரஜையாக அரசாங்கம் அவனை ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியாகத்தான் இலங்கை மண்ணில் அவன் வாழ்ந்தான்.

காளிமுத்துவின் குடும்பம் ஒரு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து மலை நாட்டை வாழவைத்தது. அந்த மூதாதைகளின் வியர்வையில் செழித்து வளர்ந்துதான் இன்று ராஜநிரித் தோட்டம் கம்பீரத் தோற்றங்கொண்டு குளுகுளுவென்று நிற்கிறது. ஏன், உண்மையைச் சொன்னாலென்ன. மலைநாடு இன்றைக்கெல்லாம் மலைபோல நிமிர்ந்து நிற்பது இந்நியப் பாட்டாளிகளின் உழைப்பின் மீதுதான்.

பிரிட்டிஷ்காரன் இலங்கையில் கோப்பிச்செடி பயிரிடத் தொடங்கிய காலத்திலேயே காளிமுத்துவின் முற்சந்ததிகள் தோட்டத் தொழிலாளிகளாக இலங்கையில் குடியேறினார்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமைபற்றிய பேச்சு ஊரில் அடிபட்ட போதுராஜகிரித்தோட்டத்தை இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போகிறதென்றும். இலங்கைப் பிரஜைகளாயுள்ளவர்களை மட்டுமே இது வேலைக் கமர்த்துமென்றும் பிரஜாவுரிமை பெறாத இந்தியர்களை இந்தியாவுக்கே அனுப்பிவிடப் போகிறதென்றும் ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள் ஆகவேண்டிய அத்தாட்சிகள் காட்டித் தங்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் காளிமுத்துவுக்குத் தகவல் கிடைத்தது.

தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது வேறு ஏதாவது அரசியல் சூத்தடிப்பதற்கோ அவன் பிரஜாவுரிமைக்கு ஆசைப்படவில்லை. அவன் கலவிப்பட்டதெல்லாம் வருங்காலச் சந்ததிகளாக விளங்கவிருக்கும் அவனது பிள்ளை குட்டிகளை எண்ணித்தான்.

காளிமுத்துவுக்கு மனைவியும் தாயும் மூன்று பிள்ளைகளுமுண்டு.குளுகுளுவென்று மலைச் சுவாத்தியத்திலே முனகிக்காவுக்கும் அப்புறாமிக்கும்பிறந்த குழந்தைகளைப் போலக் குவாகுவா என்று கத்திக்கொண்டு வாழையாய் வாழ்ந்து பாடுபட்டபின் சாகும் பொழுதாவது வாயில்லாப் பூச்சியாக சாகாமல் வாக்குரிமை பெற்றுச் சாகக்கூடாதா ? என்று ஒரு ஆசை அவன் மனதில் ஒரு மூலையில் இல்லாமல் போகவில்லை. ஆனால், அதை அவன் வெளியே சொல்லுவானா? ஒரு தோட்டத் தொழிலாளியின் ஆசைக்குப் பெறுமதி.....?

காளிமுத்து படி ஏறிய இடங்களில் பிரஜாவுரிமை கிடைப்பதற்குப் போதிய அத்தாட்சிகள் காட்டவேண்டுமென்று அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் " அங்கே அவரை போய்க்காணு. இங்கே இத்தத் துறையைக்கண்டு பேசு"என்று அங்குமிங்குமாய்ப் பலதடவை அவனை அலைக்கழித்தார்கள். இலங்கை வரும் இந்தியர்கள் இப்படியானநிலைமைகளிடையே அபூர்வமான சலிப்புத்தன்மையோடு நடந்துகொள்ள மண்டபம் 'கேம்பிலேயே' பழிக்கொண்டு விடுகிறார்களாதலால் காளிமுத்து பொறுமையோடு அங்குமிங்கும் போய் அவரையும் இவரையும் பதினைந்து தடவைக்கு மேல் பார்த்தான். பார்த்தும் பயனென்ன ?

" அத்தாட்சி வேண்டும்; பிறப்புப் பத்திரங்கள் காட்ட வேண்டும் " என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். வெள்ளைக்காரத் தோட்ட 'சூப்ரண்டன்' ஆட்சியிலே அவன் அத்தாட்சிக்கு எங்கு போவான் ?

"ஐயா, எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வச்சிருக்கோம். எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்" என்று தோட்ட 'சூப்ரண்டன்' கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போதே, அங்கிருக்கும் யாழ்ப்பாணம் ஐயா? அதோ பாருங்கள், எங்கள் கைபட்டு, எங்களது சொந்த வியர்வையும் இரத்தமும் பாய்ச்சி, சந்நதி சந்தநியா நாங்கள் பண்படுத்தி வந்த தோட்டங்களை" என்று சொன்னால் அது செவியில் ஏற மாட்டாது.

'அதற்கு அத்தாட்சி . . ?' காளிமுத்து சோர்வடைந்தான்.

'கடல் கடந்த இந்தியரின் உழைப்பைத்தான் அரசாங்கம் காட்டில் எறிந்த நிலவைப் போல இம்மாநிரி ஒதுக்கிவிடுகிறதென்றால், அவர்கள் பலமுறையிரவும் வெயிலும் மழையும் காடும் மலையும் பார்க்காமல் பாடுபட்ட தெல்லாம்தன்னீரில் கரைத்த புளி போலப் போய்விடுகிறதென்றால் அந்தத் துர்ப்பாக்கியாரிகள் பிறப்பு, இறப்பு இல்லாத அசேதனப் பொருள்களாகவுமா ஆகிவிட்டார்கள்?' என்று காளி முத்துவின் நெஞ்சம் கலங்கியது.

"வாருங்கள், அத்தாட்சி காட்டுகிறேன்" என்று வாக்குப் பதிவு உத்தியோகத்தர்களைக்காளிமுத்து ஒருநிமம் வீட்டின் பின் பக்கமாய், தேயிலைக் காட்டுக்குள்ளே அழைத்துச் சென்றான்.

உயர்ந்து வளர்ந்த அரசங்கன்று ஒன்று அங்கே நின்றது. அதைச் சுற்றிவர உத்தியோகத்தர்களை நிற்கும்படி கேட்டுக்கொண்டு, காளிமுத்து கையோடு எடுத்துச் சென்ற கோடாரியைக்கொண்டு அதை வெட்டத் தொடங்கினான்.

காளிமுத்து உணர்ச்சி வசப்பட்டிருந்தானென்பது அவனுடைய ஒவ்வொரு காரியங்களிலும் தென்பட்ட பதட்டத்திலிருந்து தெரிந்தது. உத்தியோகஸ்தர்களுச்குக் கோடாரியையும் காளிமுத்துவின் பதட்டத்தையும் பார்த்துக் கொஞ்சம் பேசாமலேதான். என்றாலும், பேசாமல் நின்றார்கள்.

அரசங்கன்றை அடிமரத்தோடு வெட்டி வீழ்த்தி விட்டு மண்ணுக்குக் கீழே புதையுண்டிருந்த மரத்தின் வேர்ப்பாகத்தை அவன் கிளப்பத் தொடங்கினான்.

பதிவு உத்தியோகத்தர்களுக்கு இதெல்லாம் விநித்திரமாகத்தோன்றிற்று. ஆனாலும், முடிவு என்னவென்பதை அறியும் ஆவலில் பேசாமல் நின்றார்கள். 'பிறப்புப் பத்திரங்குறி தோண்டுகிறாய்?" என்று கிண்டல் பண்ணினார்கள்.

மண்வெட்டியில் ஏதோ ஒரு கடினமான பொருள் தட்டுப்படவே காளிமுத்து பரபரப்பாகவே குனிந்து மண்ணைக் கிளறி அதை எடுத்தான். அது ஒரு கல்லு. "இது என்ன சலியன் இதுக்குள்ளே" என்று வெறுப்போடு தலையைச் சுழட்டி மேலே வீசினான். அது மேலே நின்ற உத்தியோகத்தர் ஒருவரது தலையில் மொடக்கென்று விழுந்தது. "ஏ, வெளியே ஆட்கள் நிற்பது தெரியவில்லையா?" என்று ஒரு அதட்டல்.

காளிமுத்து மேலும் கிடங்கைத் தோண்டினான். இப்பொழுது மண்ணுக்குள்ளே இன்னொரு பளிச்சிட்டது. புழுப்போலச் சுருண்டுபோய்க் கிடந்த அதை எடுத்துக் குலைத்தான். அதைப் பார்த்தபோது அவன் கண்கள் கலங்கின. அது ஒரு வெள்ளி இடுப்புக்கொடி. கண்ணிலே ஒற்றிக்கொண்டு மடிக்குள்ளே அதைப் பத்திரமாகச் செருகி வைத்தான்.

குறி இப்பொழுது அவன் தலையை மறைத்தது. உத்தியோகத்தர்களுக்கு நின்று நின்று கால் சோர்ந்து போயிற்று. சற்றே பின்பக்கமாக விலகி வெட்டி விழுத்திய அரசங்கன்றுக்கு சல சலக்கவில்லை. அவை வாடிப் போய்விட்டன. □

மண்ணுக்குள்ளே புதைத்து வைத்திருக்கிறானோ? பைத்தியக்காரன்' என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

அரசமரத்தின் அடிப்பாகமும் வெளியே கொண்டுவரப் பட்டாயிற்று. நிலத்தில் மூன்று முழ ஆழத்துக்கு மேலே காளிமுத்து டெங்கு தோண்டிவிட்டான். மேலும் தோண்டிக்கொண்டே போனான். பதிவு உத்தியோகத்தர்கள் சற்றே பொறுமை இழந்தார்கள். "யாருக்கப்பா

ஆத்மஞானமென்றால் என்ன?

மறைந்த எழுத்தாளர் மு. த. உளளொளி என்னும் சஞ்சிகையில் எழுதிய இக்கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

கேள்வி: ஆத்மஞானமடைந்து என்ன பயன்?

பதில்: அது ஞானமற்றகேள்வி. பயனைப்பற்றிக் கவலைப்படும் அறியாமையையும் பற்றையும் அழிப்பதுதான் ஞானம்.

கேள்வி : அப்படியென்றால்?

பதில் : பயன் என்றால் என்ன?

கேள்வி : ஒரு பொருளிலிருந்து கிடைக்கும் நன்மையும் பிரயோசனமும் பயனாகும்!

பதில் : ஒரு பொருளிலிருந்து கிடைக்கும் நன்மையும் பிரயோசனமும் பயனும் எல்லாருக்கும் ஒரே விதத்தில் இருக்கின்றனவா? ஒருவனுக்குப் பிடித்த பொருள் மற்றொருவனுக்கும் அதே அளவு பிடிக்கிறதா? அதே அளவுக்குப் பயனுடையதாகத் தெரிகிறதா? உனக்குக் கூழ்குடிக்கப் பிரியமாக இருக்கும், ஆனால் எல்லாருக்கும் அது பிடிக்குமா?

கேள்வி : இல்லை.

பதில் : அப்போ பயன் என்பது அந்தந்தப் பொருளிலேயே தங்கியிருக்கிறதா அல்லது அவனவன் மனதிலே தங்கியிருக்கிறதா?

கேள்வி : மனதில்தான்.

பதில் : ஆமாம் ஒரு பொருளிலிருந்து கிடைக்கும் பயன் என்பது அந்தப் பொருளின் தன்மையில், உண்மையில் நம் ஆசையின் தன்மைதான். ஆசை அறியாமையால் வருகிறது. அதனால் அறியாமையினால்தான் நாம் வெளிப்பொருட்களில்பயனைத் தேடுகிறோம். அந்த அறியாமையை ஒடப்பட்டதுதான் ஞானம்.

கேள்வி : அப்படியென்றால் வெளிப்பொருட்கள் தேவையற்றவையா? தேவைகள்கூட ஞானிக்கு இல்லாமல் போகின்றனவா?

பதில் : தேவை! "பயன்" என்பதின் அடுத்த பக்கம் "இதில் என்ன பயன் அதில் என்னபிரயோசனம்?" என்று தேடும் மனிதனின் இன்னோர் குணம் அது. தேவை! பயனைப் பற்றிக் கவலைப்படுபவனுக்கு வெளிப் பொருட்களில் தேவையிருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆனால் "தேவை" இருக்கிறதென்றால் நீ பூரணமற்ற நிலையில் இருக்கிறாய் என்பதுதானே கருத்து? எல்லாவும் தேவையற்ற நிலையிலான நீ பூரணமாவாய், பூரணமான ஆனந்தனாய் இருப்பாய். ஞானம் என்பது எல்லாரிற் தேவைகளுமற்ற ஆனந்தநிலைதான். ஞானிதன்னைத் தன்உடலோடு ஒன்றுபடுத்திப் பார்க்க மாட்டான், தன்மனதோடு ஒன்றுபடுத்திப்பார்க்கான், அதனால் அவற்றின் அடிப்படைத் தேவைகள்கூட அவனின் தேவைகளல்ல. அதனால் சாதாரண மனிதனுக்கு அவற்றிலுள்ள பற்றும் பிடிப்பும் அவனுக்கிருக்காது. அதுதான் முக்கியம். அவன் அவற்றின் அடிமையல்ல. நீர், உணவு போன்ற உடலின் அடிப்படைத் தேவைகள்கூட அதனால் அவனைக் கட்டுப்படுத்தப் போவதில்லை. தேவைகள், கட்டுப்பாடுகள் என்ற எல்லாவற்றையும் கடந்தவனாய் அவன் இருக்கிறான். அவனை அந்த உடலோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்பது நம் அறியாமையேதான். அவன் அப்படிப் பார்ப்பதில்லை.

கேள்வி : அதுசரி, ஆனால் சாதாரண மனிதனுக்கு அது முடியுமா?

பதில் : மனிதனின் அடிப்படைச் சாதாரணநிலை அந்த ஞானநிலைதானே? அதை மனிதன் உணர்வதில்லை, உணர்ந்து அதைத் திரும்பவும்பெற முயல்வதில்லை. மனிதனின் வீழ்ச்சி அதுதான். ஆனால் பண்புகள்தான். அந்த அறியாமைக்குரிய இலட்சணங்கள் பயனற்றவற்றையும் தேவையற்றவற்றையுந்தானே பிறப்பிக்கும்? ஆனால் அறியாமைக் குப்பட்டவனுக்கு அதுவும் விளங்குவதில்லை. தேவையற்றவையும் பயனற்றவையுமே பயனுடையவையாகவும் தேவையுடையவையாகவும் தெரிகின்றன, தன் 'அறிவு' மூலம் அவற்றையும் அவன் சரிக்கட்டல் செய்து நியாயமாக்குகிறான். அனுக்குண்டும், ஆயுதங்களும்!

கேள்வி: அது உண்மைதான். ஆனால் எல்லாருமா அனுக்குண்டையும் ஆயுதங்களையும் செய்கின்றனர்? சரித்திரத்தினதும் வல்லரசுகளினதும் பிழையான போக்குக்குச் சாதாரண மனிதனு பொறுப்பாளி?

பதில். 'சரித்திரம்' 'வல்லரசு' என்பவையெல்லாம் சாதாரண மக்களின் கூட்டுப்போக்குத்தானே? அந்த நிலையில் அனுக்குண்டுகளையும் போர்களையும் உருவாக்குபவர்கள் விஞ்ஞானிகளும் அரியல்வாதிகளுந்தான் என்று நீ நினைத்தால் அதுவும் உன் அறியாமைதான், உன் குற்றத்தை மற்றவர்களில் இடம் மாற்றுகிறாய். உன் அற்ப ஆசைகள் ஒவ்வொன்றும் ஓர் அணுக்குண்டையும் போரையும் உருவாக்க உதவுகின்றன. பயனத் தேடிக்கொண்டே பயனற்ற வாழ்க்கைக்குள் வீழ்ந்து கெடுகிறாய் உன் அவித்தைப் போக்கின் ஒவ்வொரு செயலும் ஓர் அணுக்குண்டுக்குரிய தூரத்துக் காரணமேதான். அதை மறந்துவிடக்கூடாது.

'பயன்' உணர்ந்து செய்வதாக நீ நினைத்துச் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார் 'தேவை' யான பொருட்கள் என்று நீ நினைத்துத் தேடும் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார். எல்லாம் நிரிப்பையூட்டும். காலையில் எழுந்தவுடன் உலக்குக் கோப்பி வேண்டும், கிசரட் வேண்டும், பல் விளக்கப் பற்பசை வேண்டும், வெளியே போக நல்ல சட்டை வேண்டும், காற்சட்டை வேண்டும், தலைக்குக் கிரீம் வேண்டும், முகத்துக்குப் பவுடர் வேண்டும். வேண்டும், வேண்டும், வேண்டும், வேண்டும், வேண்டும்! எப்படியோ நீ தேவைகளையுடைய பிச்சைக்காரன்தான். ஆனால் அந்தப் பிச்சைக்காரனுக்குத் தான் எத்தனை 'நாமரூப' பற்றுக்கள்! உண்மையான தெருப் பிச்சைக்காரனுக்குக்கூட அந்தளவுக்குப் பற்றும் இல்லை, தேவையுமில்லை, பணத்தோடு பசுவினும் உயர உயரத்தான் நீ அதிகமாகப் பிச்சைக்காரனாக மாறிக்கொண்டிருக்கிறாய். பற்றுவையனவுக மாறிக்கொண்டிருக்கிறாய். வேண்டும், வேண்டும்! கிசரெட்டைமாத்திரம் எல்லாச் கிசரெட்டையும் குடிக்கமாட்டாய். வோர்ஜீனியாப் புகையிலை, பிலிராரிப், பிறிஸ்ற்றல் என்ற நாம ரூபக் களில் உனக்கு எத்தனை பற்று! நீ அவற்றை ஆராய்ந்து பார்த்தால் அவை வெறுமனே நாமரூபங்கள்தான் என்று நீ நினைத்துக் கொள்ளலாம் ஆனால் அவை

தேர்ந்தெடுக்கப்பட்ட

சில தேசிய இனப் போராட்டங்கள்-

அவற்றின் தீர்வுகள்

சைப்பிரஸ்

தேசியஇனப் பிரச்சினைகள் உலகின் பல பாகங்களிலும் உள்ளன. இப்பிரச்சினைகள் அவை சார்ந்த இடம், காலம் போன்ற சூழ்நிலைகளுக் கேற்ப வேறுபடும் தன்மைகளைக் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. ஓர் அரசமைப்புக்குள் தேசிய இனப் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாதவையாகக் காணப்படும் அல்லது கருதப்படும் இடத்து அவை இறுதிக் தீர்வாக பிரிந்து செல்லும் கோரிக்கையை முன்வைத்துள்ளன. இக் கோரிக்கைகள் அவை சார்ந்த சூழலுக்கேற்ப வெற்றியீட்டியவையுமுண்டு, வெற்றியீட்டத் தவறியவையுமுண்டு. இந்த வகையில் வெற்றியீட்டியதற்கு உதாரணமாக பங்களாதேஷ் பிரச்சினையையும், வெற்றியீட்டத் தவறியதற்கு உதாரணமாக பியபிராவையும் (Biafra) குறிப்பிடலாம். சில தேசிய இனப்பிரச்சினைகள் உள்நாட்டுப் பிரச்சினையாகவும் சில அயல் நாடுகளுடன் சம்பந்தப்படும் பிரச்சினையாகவும், சில சர்வதேசப் பிரச்சினையாகவும் காணப்படுகின்றன. இன்று இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை பிரிந்துசெல்லும் கோரிக்கையை முன்வைத்துள்ள பிரச்சினையாகவும், அயல் நாடுகளுடன் மட்டுமன்றி சர்வதேச அரசியலுடனும் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினையாகவும் காணப்படுகின்றது. இந்த வகையில் இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை விளங்கிக்கொள்வதற்கு பின்னணியாக உலகின் பல பாகங்களிலும் தோன்றிய முக்கியமான சில தேசிய இனப் பிரச்சினைகளின் வரலாற்றம்சங்களைச் சுருக்கமாகவேனும் நோக்குதல் மிகவும் அவசியமாகும். சுவிட்சலாந்து, ஜிங், உக்கிறேனியன், பேலோறைஷியா, பாலிஸ்தான் பிரச்சினை, ஜம்மு—காஷ்மிர், நிபெத், பங்களாதேஷ், தென்குடான், சைப்பிரஸ்—துருக்கி, கியூபெக், இலங்கை—தமிழ் ஆகிய பிரச்சினைகளை சுருக்கமாக நோக்குவோம்.

தேசிய இனப்பிரச்சினையில் தற்போது, இலங்கையில் உள்ளதுபோல் இன்னும் தீர்க்கப்படாமல் இழுபறிக்குள் அகப்பட்ட நாடாக இருப்பது சைப்பிரசாகும்.

சைப்பிரஸ் 3571 சதுரமைல் பரப்பைக் கொண்ட ஒரு தீவாகும். இது இலங்கைத் தீவின் மொத்தப் பரப்பில் 1/7 பங்காகும். இத்தீவானது துருக்கிக்குத் தெற்கே 50 மைல் தொலைவிலும் கிரேக்கத்துக்குத் தென்கிழக்கே 650 மைல் தொலைவிலும் சிரியாவிற்கு மேற்கே 77 மைல் தொலைவிலும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குத் தெற்கே 300 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு மொத்த மக்களில் 74.7 °/. கிரேக்க - சைப்பிரஸ் மக்களும், 24.6 °/. துருக்கிய சைப்பிரஸ் மக்களும் வாழ்கின்றனர். முதலாவது பிரிவினர் கிரேக்க மொழியைப் பேசுகின்ற கத்தோலிக்கர்களாகவும் இரண்டாவது பிரிவினர் துருக்கி மொழி பேசுகின்ற இஸ்லாமியராகவும் உள்ளனர்.

சைப்பிரஸ் கிரேக்கத்துடன் இணையவேண்டும் (EROSIS) என்ற கிரேக்க - சைப்பிரஸ் மக்களின் கோரிக்கைக்கும், சைப்பிரஸ் கிரேக்கத்துடன் இணையாது, சமஷ்டி அடிப்படையில் ஒரு சுதந்திர அரசாக இருக்கவேண்டும் என்ற துருக்கிய - சைப்பிரஸ் மக்களின் கோரிக்கைக்கும் இடையில் கிடந்து தத்தளிக்கும் பிரச்சினையே சைப்பிரஸ் பிரச்சினையாகும். இப்பிரச்சினையில் கிரேக்கம், சைப்பிரஸ், துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் தமக்குரிய நலன் நோக்கில் சம்பந்தப்படுகின்றன.

நமது அரசு இன்னொரு அரசுடன் இணையவேண்டும் என்ற முடிவை பெரும்பான்மை இனமும், அவ்வாறு இணையக் கூடாது என்ற முடிவைச் சிறுபான்மை இனமும் வரித்துள்ள இறுக்கமான கயிறிழுப்புப் பிரச்சினையாக சைப்பிரஸ் விவகாரம் உருக்கொண்டுள்ளது.

பிரித்தானியாவின் கொலனித்துவ ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த சைப்பிரஸ் 1960 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து விடுதலைபெற்றது. ஆனால் கிரேக்கத்துடன் சைப்பிரஸ் இணையவேண்டும் என்ற கருத்தோ, கிரேக்க சைப்பிரஸ் மக்களிடம் 19 ஆம் நூற்றாண்டில் முற்பகுதியிலிருந்தே நிலவி வந்தது. இதற்கு வலுவூட்டியாக, கிரேக்க சைப்பிரஸ் பிரதிநிதிகளின் கருத்து இக்கருத்தில் முக்கிய பங்கெடுத்து வந்துள்ளது.

கிரேக்கத்துடன் சைப்பிரஸ் இணையவேண்டும் என்ற கிளர்ச்சி 1931-ஆம் ஆண்டு நிகழ்ந்திருந்தபோதும் அது ஸ்திரமுறப்படாது அடக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1948-ஆம் ஆண்டு பிரித்தானியா சைப்பிரஸிற்கு சுயாட்சி வழங்க முன்வந்தபோதும், அதை வழங்கவிடாது கிரேக்க சைப்பிரஸ் மக்கள் தடுத்தனர். காரணம் சைப்பிரஸ் ஒரு தனி நாடாகச் சுதந்திரமுறுவது தாம் வரித்துள்ள இணைப்பை குறிரவிடாது குழிதோண்டிப் புதைத்துவிடும் என்று அவர்கள் கருதினர். பின்னர் 1950 ஆம் ஆண்டில் சைப்பிரஸ் பிரதிநிதிகள் சபை, இணையவேண்டும் என்பதற்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டதோடு தன்னிச்சையாக இதற்கான வெகுஜன (Pleeiscite) வாக்கெடுப்பை நிகழ்த்தியது இதே ஆண்டு அநிமேற்றிராணியார் மக்காரியோஸ் இணைப்புக்கான ஒரு புவித சத்தியப்பிரமாணத்தை (Holy Oath) எடுத்தார்.

சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சைப்பிரசை கிரேக்கத்துடன் இணைப்பதற்கான தீர்மானத்தை 1954-ஆம் ஆண்டு கிரேக்கம் ஐ. நா. சபையில் பிரேரித்தது. ஆனால் இதை துருக்கி வன்மையாகக் கண்டித்தது. இதைத் தொடர்ந்து 1955-ஆம் ஆண்டு, கிரேக்க தேசத்தின் ஆதரவுடன் இணைப்பதற்கான 'இயோகா' (EOKA) எனப்படும் ஆயுதம் தாங்கிய தலைமறைவு இயக்கத்தை பெரும்பான்மை இனம் நிறுவியது. குண்டு வெடிப்புக்களும் துப்பாக்கிச் சூடுகளும் இதைத் தொடர்ந்து இடம் பெற்றன. இதன் எதிர் விளைவாக துருக்கிய சைப்பிரசிலும் இதேபோன்ற தலைமறைவு இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் பெறுபேறாய் 1958இல் இரு இனங்களுக்குமிடையில் பெரும் இனக்கலரம் ஒன்று மூண்டது.

இவ்வினக்கலவரத்தின் உற்றுதலால் 1959-ஆம் ஆண்டு கிரேக்கம், துருக்கி, பிரித்தானியா ஆகிய மூன்று அரசுகளும் சைப்பிரஸ் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக ஓர் உடன்பாட்டுக்கு வந்தன. இவ்வுடன்பாட்டின் பிரகாரம் சைப்பிரசுக்கு சுதந்திரம் வழங்குவதென்றும் இரு இனங்களும் பிரதேச சுயாட்சி அடிப்படையில் ஓர் அரசின் கீழ் இருப்பதென்றும், மத்திய அரசில் ஏழு கிரேக்கருக்கு மூன்று துருக்கியர் என்ற விகிதத்தில் இடம்பெறச் செய்வதென்றும் முடிவாகியது. இவ்வேற்பாட்டின் அடிப்படையில் 1960-ஆம் ஆண்டு சைப்பிரஸ் சுதந்திரம் பெற்றது.

ஆனால் சைப்பிரஸ் பிரச்சினையின் முக்கியத்துவம் என்னவென்றால் இத்துடன் அதன் விவகாரம் முற்றுப்பெறாதே. தொடர்ந்தும் கிரேக்கத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் இரு இனங்களும் ஒன்றோடொன்றுமோதிக்கொண்டன. இதனால் 1964-ஆம் ஆண்டு, ஐ. நா. சமாதானப்படை, சைப்பிரசில் அமைதியை நிலைநாட்ட அனுப்பப்பட்டது. இருந்தபோதும் கிரேக்கராணுவம் சைப்பிரசினுள் பல வழிகளாலும் ஊடுருவல் செய்தது. இதற்குப் போட்டியாக 1974 ஆம் ஆண்டு துருக்கி ராணுவம் சைப்பிரசுள் பிரவேசித்தது. அது அங்கு துருக்கியர் வாழும் பகுதிகளைப் பாதுகாத்து, துருக்கியின் பாதுகாப்பின்கீழ் அங்கு ஒரு தனியரசாகச் செயற்படத் தொடங்கியது. ஆயினும் துருக்கி - சைப்பிரஸ், சைப்பிரசின் ஒரு பகுதியாகவே இருக்க விருப்பங்கொண்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில் சைப்பிரஸ் கிரேக்கத்துடன் இணையக்கூடாதென்ப தி லும் அது உறுதியாகவே உள்ளது. 1978-ஆம் ஆண்டு துருக்கி-சைப்பிரஸ் பிரதிநிதி ஐ. நா. பொதுச்செயலாளரிடம் சமர்ப்பித்த தமது கோரிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "சமஷ்டி ஆட்சி அமைப்பில்தான் இரு மொழிபேசும் இரு அரசுகள் நிறுவப்படுவதே எமது தேவையாகும்"

இன்னும் சைப்பிரஸ் பிரச்சினை தீராத ஒன்றுகவே தொடர்கிறது. ○

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த ஜே என் டிக்ஷித், அண்மையில் தனக்களிக்கப்பட்ட பிரிவு உபசாரத் தின்போது பின்வருமாறு கூறியுள்ளார். "வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு போதிய அதிகாரங்களை வழங்க இலங்கை அரசு தவறுமானால் தனிநாடு கோரிப் போராடுபவர்களின் கோரிக்கை நியாயமானதாக் கப்படுகிறிடும். அத்தோடு இம் போக்கு மேலும் தொடருமானால் இலங்கையில் சைப்பிரஸ் போன்ற நிலை ஏற்படு உருவாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்" டிக்ஷித் எச்சரித்த இந்நிலையின் பொருத்தம் கருதி நாம் முதலில் சைப்பிரஸ் பிரச்சினையை இங்கு முதலீல் வெளியிடுகிறோம். இவ்வாரம் நிசையின் இதழ்களில் வெவ்வேறு தேசிய இனப் போராட்டங்கள் அலசப்படும்.

—ஆர்—

சோக்ரடீஸ், ஒரு சிறுவன் எமது சிந்தனைப் பண்பாடு

சுதந்திரமான கருத்துப் பரிமாறலுக்கு எப்போதும் தயாராக இருந்தவர் சிந்தனையாளர் சோக்ரடீஸ். சிந்தனை வளர்ச்சியைத் தூண்டுவதிலும் புதிய கருத்தை நோக்கிய உந்தலை ஏற்படுத்துவதிலும் சோக்ரடீஸ் வல்லவர். இதில் அவர் வயது வித்தியாசம், என்பவற்றையும் மீறி எந்த சிறுவனிடமும் கூட உரையாடுவார். விவாநிப்பார். உதாரணமாக இளைஞன் என்ற சிறுவனுடன் அவர் மனந்திறந்து விவாதம் செய்ததை இங்கு மனதிற் கொள்ளவேண்டும். நீதிபற்றிய கோட்பாடுகளை ஒரு கூட்டத் தினர் மத்தியில் இவர் விளக்கிக் கொண்டிருந்தபோது கிளர்ச்சி என்ற அந்தச் சிறுவன் எழுகிறான். நான் இதுபற்றி ஆட்சேபிக்கிறேன், என்று குரல் எழுப்பினான். சோக்ரடீஸ் அந்தக் குரல் எழுந்த உருவத்தையல்ல அந்தக் குரலை மதிப்பளித்து மேற்கொண்டு விவாதிக்கத் தயாராகிறார். தொடர்ந்து நிகழ்ந்த விவாதத்தின் முடிவில் சோக்ரடீஸ் தனது முடிவான கருத்தை நிறுவுகிறார். இங்கே தனது கருத்தை நிறுவுவதில் அவர் பெற்றி பெற்றார் என்பதல்ல பெரிய விஷயம். கருத்துக்களை விவாநிப்பதில் 'நிறுக பெரிக' என்ற விங்கிய மரபொன்றை துறந்தவராய் அவர் இருந்தார் என்பதும், கேள்விகளை எழுப்பி விவாதிக்கும் சிந்தனை மரபை நிறுவர் மத்தியிலும் வளர்க்க உந்துசக்தியாய் இருந்தார் என்பதும்தான் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும் "பணியுமாம் என்றும் பெருமை" என்றகுறளுக்கும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற குறளுக்கும் ஒருசேர உதாரணமானவராய் நிற்கிறார் சோக்ரடீஸ். மேற்குறித்த குறள்கள் தமிழர்களிடமும் ஒரு ஆழமான சிந்தனை முன்னோட்டம் இருந்தன என்பதற்கான சிறுபொறி உதாரணங்களாய் நிற்கின்றன; அதற்கான தோற்றுவாய் இருந்தன என்பதையும் காட்டி நிற்கின்றன. என்றாலும் அதைத்தொட்டு ஒடும் தொடரான சிந்தனை மரபு இல்லையே என்ற ஆதங்கம் ஏற்படுகிறது. நினைக்கநினைக்க நெடியஇருட்டு ஒன்று விரிகிறது. இதே இருள் தகர்ந்து ஒளி கூட்டும் சமிக்ஞைகளின் 'சிலமன்' எம்மிடம் தட்டுப்படுமா?

இந்தச் சமிக்கைகள் தோன்றுவதற்கு அறிஞர்கள் என்று சொல்லப் படுபவர்களிடம் ஒரு சிந்தனைப் பண்பாடு வளர்ச்சியடைய வேண்டும். உட்சுருங்கி மனோபாவங்களை விடுத்து கேள்விகள் எழும் திக்குகளை நோக்கி வெளிவிரிந்து, கேள்விகளுக்கு முகங்கொடுக்கும் மனோபாவம் வளரவேண்டும், கேட்கக்கூடியவற்றுக்கு செவி கொடுத்தலும், ஏற்கக் கூடியதாயிருந்தால் ஏற்றலும், நிராகரிக்கும் போது தக்க நியாயங்கள் காட்டலும் சிந்தனைத்தகைமையைக் காட்டும் எல்லாவற்றையும்விடப் பெரியது தெரியாதது என்றல் தெரியாது என்று வெளிப்படையாய் ஒப்புக் கொள்வதும் பின் தேடிப் பிடித்துப் படிக்கதென்றுலும் சந்தேகத்தை தெளிவித்தலும் உண்மை அறிவின் உயிரை வளர்க்கும். எம் அறிஞர்கள் இந்த சிந்தனைப் பண்பாட்டுக் குரிய செழுமையான உதாரணங்களாய் திகழ்வார்களா? பட்டம், பதவி, பெருமை பாராட்டாமல் எங்கும், எவர்க்கும் எந்த இடத்திலும் கருத்துப்பரிமாறலுக்குத் தயாரான சோக்ரடீஸ் போன்ற உதாரணராய் திகழ்வார்களா?.

□

உன்னுடைய
அழைப்புக் குரலைக்
கேட்பார்
யாரும் இல்லையெனில்
நீ தனித்துச்செல்,
தனித்துச்செல்,
தனித்தே செல்.....

— கவியரசர்
ரவீந்திரநாத் தாகூர்

ஆத்ம...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூட நம்பிக்கையல்ல. அது போகட்டும், விஞ்ஞானமும் தனக்கேயுரிய புதுப்புது மூட நம்பிக்கைகளை உருவாக்கித் தான், இருக்கிறது. விஞ்ஞானம் என்றவுடன் நீ எதையும் நம்பத் தயார்? அதுவே ஓர் மூடநம்பிக்கையல்லவா?

எல்லாக் சமய வேதங்களும் அவைக்குரிய துறையில் விசயங்களை விளக்குபவையே. அந்த விசயங்களுக்கு அவையேதான் பிரமாணங்கள், அவற்றை நீ நம்பத்தான் வேண்டும். அணுக்குண்டு இருப்பதாக நீ நம்புகிறாய், ஆனால் அணுவையே நீ கண்டதில்லை. பிறகு அணுக்குண்டையும் எப்படிநம்பலாம்? விஞ்ஞானிகள் சொல்வதாக நீ கூறுவாய். பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன என்பாய். ஹிரோஷிமாவின் அழிவையும் நீ காட்டுவாய். அவற்றைக் கொண்டுதான் நீ அணுக்குண்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளுகிறாய். ஆனால் அணுக்குண்டை நீ பார்த்ததில்லை. அப்படியென்றால் சாதாரண பத்திரிகைகளை நம்பும் நீ- அதே போல் வேதங்களை ஏன் நம்பக்கூடாது? விஞ்ஞானிகளை நம்பும் நீ மெய்ஞ்ஞானிகளையும் ஏன் நம்பக்கூடாது? ஹிரோஷிமாவின் அழிவைப் பார்க்கும் நீ உலக ஆத்மஞானிகளின் அகவளர்ச்சியை ஏன் பார்க்கக் கூடாது? ஒப்புக்கொள்ள க் கூடாது! பார்க்காத ஒன்றை விஞ்ஞானிகளும் அரசாங்கங்களும் உனக்குக் காட்டாத ஒன்றை, அந்த அணுக்குண்டை நம்புவதற்குக் சாதாரண பிரமாணங்களே யெல்லாம் நீ ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்குப்போது இறைவனையும் ஆத்மஞானத்தையும் வலியுறுத்தும் சமய வேதங்களையும் அனுபூதிமான்களின் அனுபவத்தையும் ஏன் ஏற்று அவற்றின்படி ஆராயக் கூடாது? முடியாது என்றால் அதைவிட முட்டாள் தனமும் மூட நம்பிக்கையும் வேறு என்ன இருக்கிறது?

கேள்வி: நம்பலாந்தான். ஆனால் சமய நூல்கள் எல்லாம் தங்களுக்குள்ளேயே முரண்பட்டுக் காணப்படுகின்றன வே. உண்மையான ஒரு பொருள் இருக்கிற தென்றால் இப்படி முரண்பட்ட சமயங்கள் ஏன் வரவாம்? எனவே அவற்றை எப்படி நம்பலாம்?

பதில்: விஞ்ஞான விளக்கங்கள் எல்லாம் காலத்துக்குக் காலம்மாறிக்கொண்டும் திருத்தப்பட்டுக்கொண்டு நிற்தானே வருகின்றன? நியூற்றனின் கொள்கை ஐன்ஸ்டீனின் கொள்கையால் பிழையாக்கப் படவில்லையா? ஆனால் அதுவரை நியூற்றனின் கொள்கை அறிவு வளர்ச்சிக்கு உதவவில்லையா? அது மட்டுமல்ல ஐன்ஸ்டீனின் கொள்கைக்குப் பின்னரும் தன்னுடைய எல்லைக்குள் நியூட்டனின் கொள்கை இன்னும் சரியாகவே இருக்கவில்லையா? அவற்றை நம்பிப்பயன் பெறும் நீ மத நூல்களையும் நம்பினால் என்ன? எல்லா மத நூல்களையும் படி. அவையெல்லாம் அந்தந்தக்கால மனநிலைகளுக்குரியவையாகவும், உத்தேசியவையாகவும் இருந்த தவை போல் எல்லாக் காலத்திலும் அதேதைக மனநிலைக்கு உதவவே செய்யும். பேருண்மையை அறிய அவை உதவுபவைதான் பேருண்மையை அவற்றால் நிறைப்பிடிக்க முடியாது. அதனால் முரண்பாடுகள் இருக்கவே செய்யும். அந்த முரண்பாடுகள் பேருண்மையை உணர்ந்து வெளியிட்ட மனங்களின் குறைபாடுகள்தான். பேருண்மையின் முரண்பாடுகளல்ல. ஒரே வெளியுலக நிலை நியூட்டனின் பார்வையிலும் ஐன்ஸ்டீனின் பார்வையிலும் வெவ்வேறு தரங்களில் வெளியிடப்படலில்லையா! அதுபோல அந்தந்தத் தரங்களில் ஒவ்வொன்றும் உதவத்தான்செய்யும். எனவே ஒரு மதத்தை மட்டும் நம்பாதே எல்லாவற்றையும் நம்பிப்படி. நம்பித்தேடு. உண்மையை அனுபவித்து உணரலாம்.

கேள்வி: விஞ்ஞானிகள் தங்கள் கருத்துக்கள் பிழையானவை என்று காணும்போது அதை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் மதவாதிகள் ஒப்புக் கொள்வதில்லையே?

பதில்: மதவாதிகளை அனுபூதிமான்களுடன் மாறுபட்டுச் செய்யாதே, விஞ்ஞான உண்மைகளை விளங்கிக்கொள்ளாத நீ உன் அறியாமையை விஞ்ஞானிகளின் கருத்துக்களைக் சொல்வதுபோல் இந்த மதவாதிகளும் சொந்த அனுபவமற்ற காரணத்தால் தங்கள் அறியாமையைும் மதக்கோட்பாடுகளில் ஏற்றிவிடுகின்றனர். அவர்கள் நம்பிக்கையோடு நின்றிவிட்டவர்கள். அந்த நம்பிக்கைக்குப் பின்னர் தாங்களே தேடிக்கண்டு அனுபவித்ததில்லை. அதனால் இவர்கள் தான், இந்த வெறும் நம்பிக்கைவாதிகள்தான், மத உண்மைகளைத் தங்கள் அறியாமைக்குள்ளும், ஆணவத்துக்குள்ளும் நசுக்கிக்கொள்பவர்கள். ஒவ்வொரு மதத்துக்கு முரிய உண்மையான அனுபூதிமான்களினது வாழ்க்கையிலும் செயல்களிலும் எல்லா மதங்களையும் இணைத்தும், எல்லாவற்றிற்கும் அப்பாலப்பட்டும் நிற்கும் பேருண்மையின் ஒளியை நீ காணலாம். அவர்களையே இலட்சிய புருஷர்களாக ஏற்றுக்கொள். மத நூல்களை அவர்களின் வாழ்க்கையைக்கொண்டு வியாக்கியானம் செய்.

நீ நம்புவது நல்லது -ஆனால் நம்பிக்கையோடு நிற்றிவிடாதே. அந்த நம்பிக்கையோடு நீ தேடத் தொடங்க வேண்டும். தேடிக் கண்டபின் வேதங்களும் உனக்குத் தேவையற்றவை ;ய.

ஞானி வேதங்களையும் தூக்கி யெறிந்து விடுவான், அவனை விட விஞ்ஞானி வேறுயார் இருக்கிறார்கள்? முதலில் நம்பிக்கையை, பின்பு தேடத் தொடங்கு, அனுபவித்த பின்பே ஏற்றுக்கொள். தேடத் தொடங்காதவரைக்கும் உன்னால் தீர்ப்பளிக்க முடியாது. தீர்ப்பளிக்க உனக்குத் தகுதியில்லை. அதுவரையும் நீ வைத்திருப்பவையெல்லாம் மூடநம்பிக்கைகள்தான். நீ அவற்றைப் பெரிதாக "விஞ்ஞானப் பார்வை" என்று பெயர் சூட்டி நம்பலாம். ஆனால் உண்மையில் அவை வெறும் மூட நம்பிக்கைகளேதான். "விஞ்ஞான மூடநம்பிக்கைகள்".

— மு. ந.

நன்றி: "உலகொளி" ○

வரலாற்றின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் முதலாளித்துவ அரசாங்கம், ஆட்சியைக் கைப்பற்றியது. இவர்கள் லெனின் சட்ட விரோதமானவன் என்று கூறினார்கள். அன்றில் இருந்து லெனின் தலை மறைவு வாழ்க்கை வாழத் தொடங்கினார். அவருடைய தலை மறைவு வாழ்க்கையில் புகை யிரதத்தில் கரி தள்றபவனாக, கிழவனாக, பாதிரியாராக, புல்வெட்டுபவனாக இன்னும் பல வேஷங்களைப் போட்டு, எதிரிகளை ஏமாற்றித் தப்பினார். 1917 ஒக்டோபர் 24 ஆம் திகதி புரட்சி வென்றது. பெத்ரோகிராத் (பெத்ரோகிராத் என்பது பீட்டர்ஸ் பர்க்-பின்னையது ஜோர்மன் பெயர்) கைப்பற்றப்பட்டது. புரட்சியின் போது தொடர்ந்து நித்திரை கொள்ளாமல் புரட்சிகர வேலையில் மிகுந்த கவனம் செலுத்தினார். இவருக்கு உறுதுணையாக இருந்தவர்களில் ஸ்டாலினும் ஒருவர். லெனின் கொம்யுனிஸ்ற் கட்சியை அமைத்தார். தலைமை இவரிடம் கொடுக்கப்பட்டது.

கொல முயற்சி:

ஒரு நாள் தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசிவிட்டு வெளியே தோழர்களுடன் கதைத்துக் கொண்டு இருந்த போது, ஒரு மாது இவரை நோக்கி மூன்று துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தார். ஆனால், படுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

இவர் தோழர்களின் நலத்தில் மிக அக்கறை உள்ளவர். தோழர்களுடன் சேர்ந்து அயராது உழைப்பார். உழைப்பவர்களை மதித்தார். மக்களின் பிரச்சினைகளை அமைதியாகக் கேட்டு தீர்த்து வைப்பார். நித்திரை என்பதே இவருக்கு குறைவு. நித்திரை செய்வதும், ரஷ்யாவில் புரட்சி நடத்துவது—நடத்திச் செல்வது எப்படி என்ற சிந்தனையிலேயே, தன் வாழ் நாளைக் கழித்தார். மாபெரும் மனிதர், தோழர் லெனின் 1924 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அதாவது, 65 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு மாலையில் கோர்கி கிராமத்தில் அமைதியாகக் காலமானார். ஆனால் அவருடைய நினைவுகளும், அவர் அமைத்த புதிய சமூக அமைப்பும், அதாவது சோஷலிச சமுதாயமும், இன்று எம் கண் முன்னே உள்ளது; என்றும் இருக்கும். ○

உலகக் கவிதை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

□ எனது கவிதைகள் சொந்த அனுபவங்களையும், அரசியலையும் பற்றியதாயிருக்கின்றன. தவிர, ஓர் அரசியல் கவிஞன் என அழைக்கப்பட நான் விரும்பவில்லை. நான் சிறந்தவாசிரியனுகவும், கட்டுமானவாளுகவும் இருக்கிறேன்.

ஜுடித் ரெட்ரிகஸ்

அவஸ்ஸிறேவியா

O ஒரு பெண்ணிலவாதக் கவிஞரென, உங்களைச் சொல்லிக்கொள்வீர்களா?

□ பெண்ணிலவாதியென்ற முறையில் நினைக்கட்டாயம் எழுதவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, ஒருபோதுமே நான் கவிதை எழுதியதில்லை. -ஆனால், பெண்களின் இருப்பு ஒருவகை 'உறக்கம்' போல் இருப்பதை அவதானிக்கிற போது, அதுபற்றிக் கவிதைகள் எழுதியுள்ளேன். தனது வாழ்க்கையை மேலும் அர்த்தமுள்ளதாக உருவாக்க விரும்பும் எந்தப் பெண்ணும் ஒரு பெண்ணிலவாதி என்பதே, பெண்ணிலவாதம் பற்றிய எனது வரைவிலக்கணமாகும். ○ எத்தகைய கடப்பாட்டில் நீங்கள் நம்பிக்கை கொண்டுள்ளீர்கள்?

□ எனது அபிப்பிராயத்தில் ஒரு கவிஞன் மனிதத்தன்மைக்குக் கடப்பாடுடையவராக இருக்க வேண்டும்; அவள் அல்லது அவள் தேர்மையுடையவளுக இருக்க வேண்டும். பொய்கூறுமாறு கேட்கப்படும் கவிஞன், மௌனமாக இருக்க வேண்டும்; அதுவும், எதிர்ப்பின் ஒரு வடிவம்தான். உடன்பாடேனப் பொருள் கொள்ளக்கூடிய அபாயம் அதில் இருப்பதையும், உணர்கிறேன்.

நன்றி:
ஸ்வ்ரென்ற் லேன் □

கவிதைகள்

11-4-89 செவ்வாய்

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றும் கட்ட வாசிப்பு ஐம்பது அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. □ அரசாங்கத்தின் யுத்த நிறுத்த அறிவிப்பு ஒரு பாசாங்குத் திட்டமேயென, விடுதலைப் புலிகளின் அரசியற்குழு அறிக்கையொன்றில் தெரிவித்தது □ திருகோணமலையிலிருந்து யாழ்.வந்த பஸ் ஹொரவுப் பொத்தானுக்கு அண்மையில் கொள்ளையிடப்பட்டது.□ நாட்டின் எந்தப் பகுதியானும், வன்செயல்கள் தொடர்பாக சட்டம் ஒரேமாதிரியானதாகவே கடைப்பிடிக்கப் படவேண்டுமென, அ. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினுர்.□

12-4-89 புதன்

கல்முனையில் புதிய தமிழ் உதவி அரச அதிபர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது'□ தீவிரவாதக் குழுக்களின் உறுப்பினர்கள் இங்கு வந்திருப்பதை, பலவிளைத்தின் அறிகுறியாக நினைக்காதீர்கள் என சாம் தம்பிமுத்து நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்□ உடற்புலல்வால அலகொல்ல தோட்டத்தில், தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து, தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை அறிக்கை வெளியிட்டார்□ அரசியல் ஞானியின் தலைமையே இன்று நாட்டுக்குத் தேவை.ஜனுதிபதி மோஸலாகச் செயற்பட வேண்டும் என, முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.□ யாழ். நகரில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்□ புத்தூரில் தேநீரத் இடம்பெற்றது.□ 3ஆம் நிகழ்வு 'நியூஸ்லீக்' சஞ்சிகை, முஸ்லிம்களின் முறைப்பாட்டினுல் தடைசெய்யப் பட்டது.□ பிரபல தமிழ்நிகையாளர் கே. நடராஜாவின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் இடம்பெற்றன.□ வவுனியாப் பகுதியில் கண்ணிவெடியில் கிக்கி 10 இந்தியப் படையினர் பலி.□

13-4-89 வியாழன்

திருகோணமலையில் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலர் இறந்ததோடு, 54 பேர் காயமடைந்தனர். முழு நேர ஊரடங்கு உத்தரவு உடன் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. சம்பவத்தைத் தொடர்ந்து தமிழர் மீது தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டதில் 10 பேர் இறந்தனர்□ பயிற்சி முடித்த 250 குடிமக்கள் தொண்டர் படையினரின் அணிவகுப்பு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.□ மாலை 5.30 மணியளவில் வதிரி தேவரையாளிப் பகுதியில் மோதல் சம்பவம் இடம் பெற்றது□ பருத்தித்துறையில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.□

14-4-89 வெள்ளி

யாழ். கந்தர்மடத்தில் மாலை 6.40 மணியளவில் 'ஹை—ஏஸ்' வான் ஒன்றில் இருந்த குண்டு வெடித்ததில் பலர் உயிரிழந்தனர். 18 பேர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்□ இரவு 8 மணியளவில் நல்லூரில் ஒரு ஹோமசேவகர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்□ அநியாயமாக எமது மக்கள் சுட்டுக் கொல்லப்படுவதை வெறுக்கிறோம் என விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது□ கிண்ணியாவில் பதற்றம் நிலவுகிறது□

15-4-89 சனி

வெலி ஓயாப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 21 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்□ அம்பாந்தோட்டையில் நடந்த கண்ணிவெடித்தாக்குதலில் 5 இராணுவத்தினர் மரணமாகினர்□ கந்தர்மடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மரணமான தமது இயக்கப் போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் அஞ்லலி தெரிவித்து விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டனர்□ 'வடக்கு—கிழக்கை துண்டாடும் சதி முற்றுப் பெற்றுவிட்டது' என்ற தலைப்பில் ஈ.ஜ.மு. பொதுச் செயலாளர் வே. பாலகுமார் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்□

16-4-89 ஞாயிறு

பேச்சுவார்த்தை பற்றிப் பேச பிரதிநிதியை நியமிக்கும்படி கேட்டு, ஜனுதிபதி விடுத்த லேப்புலிகளுக்குக் கடிதம் எழுதினுர்□ யாழ். நோக்கிப் புறப்படவிருந்த தனியார் பஸ்மீது மொழும்பில் இரவு 7.30 க்கு கிரனேற் வீசப்பட்டது. பலர் படுகாயமடைந்தனர்□ இருகோணமலைக்குண்டுவெடிப்பில் காயப்பட்டவர்களை, அனுராதபுர ஆஸ்பத்திரிக்குச் சென்று, சிறிமா பண்டாரநாயக்கா பார்வையிட்டார்□ பல்கலைக்கழக மாணவன் செ. சிறில்கந்தராசாவை விடுதலை செய்யும்படி யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அமைதிப்படையைக் கோரியுள்ளது□

17-4-89 திங்கள்

நாரம்மல பொலிஸ் நிலையம் அதிகாலை 1.30 அளவில் தாக்கப்பட்டது; 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்□ இருமலைக் குண்டுவெடிப்பை அடுத்து 29 தமிழர் காணமல் போய்விட்டனர்□ கச்சாயில் மோதல் சம்பவமொன்று இடம் பெற்றது; ஒவ்வொரு நடத்தப்பட்டது□ கல்முனையின் முன்னுள் எம். பி. யான எம். எஸ். காரியப்பர் காலமானுர்□

18-4-89 செவ்வாய்

பெற்றோல், டீஸல் என்பவற்றின் விலை உயர்ந்தது. மண்ணெண்ணெய் விலையில் மாற்றமில்லை□ திருமலைக் குண்டு வெடிப்பில் இறந்தோர் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது. 27 சிங்களரும், 9 தமிழர்களும், 3 முஸ்லிம்களும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்□ மேசன் தொழிலாளி ஒருவரும், ஆயுர்வேத வைத்தியர் ஒருவரும் யாழ். நகரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்□ புதிய பல்கலைக்கழக மாணவிக்குமுவை ஜனுதிபதி நியமித்துள்ளார்□

திசை
THISAI

திசைமுகம்

''சுதந்திர ஒளியிலில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

புதிய திருப்பம்

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் இணக்கம்.

விடுதலைப் புலிகளின் இணக்கத்துக்கான இப் புதிய திருப்பம் பல மட்டங்களில் பல கருத்துப் பரிமாற்றங்களையும் உணர்வு மோதல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும் தமிழ்பேசும் இனத்தின் விமோசனத்தில் உண்மையான அக்கறை கொண்டுள்ள சகல சக்திகளும் இதை வரவேற்றுள்ளன என்பது முக்கியம்.

ஆயினும் இரண்டு கேள்விகள் அரசியல் அவதானிகளால் தவிர்க்கப்படமுடியாத வகையில் எழுப்பப்படுகின்றன, ஒன்று: இந்தியா இந்த நிருப்பத்தை வரவேற்றுள்ளது. எனினும் அதன் தோளுக்குமேலால் நடைபெறும் இப்பேச்சுவார்த்தையை அது உண்மையாகவே விரும்புகிறதா? இதனால் அதன் நலன்கள் பாதிக்கப்படாதா?

உண்மையாகவே இந்தியா இதை உளப்பூர்வமாக விரும்புகிறதென்றும் இதனால் அதற்கு நன்மையே என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். காரணம் இப்பேச்சுவார்த்தை வெற்றிபெற்றால் புதிதாக இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஏற்பட இருக்கும் நட்புறவு உன்படிக்கை துரிதப்படுத்தப்படலாம் என்றும் அது இந்தியாவின் நலனை மேலும் பேணவே செய்யும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இரண்டாவது, இப்பேச்சுவார்த்தைக்கு எதிராகத் தெற்கில் தூண்டப்பட்டுவரும் இளத்துவேஷம் இதைப்பாதிக்காதா? :ஐலன்ட்' 'சன்' போன்ற அரசியல் லாபக் குழுக்கள் இதையே செய்கின்றன.

ஆனால் சரித்திர ஓட்டம் என்றும் பின்னடிப்பாகவே இருக்கப்போவதில்லை என்பதும் உண்மையே. அதனால் சரித்திரம் தன்னையே திருப்பித்திருப்பித் தருகிறது என்ற போதும் அது ஒரே தடத்திலேயே, ஒரே பரிமாணத்திலேயே நிகழ்வதில்லை.

இன்னும் முற்போக்கான தளத்தையும் இன்னும் முற்போக்கான பரிமாணத்தையுமே தன் வழியாகவும் உருமாறவும் கொள்கிறது என்பதும் மனங்கொள்ளப்படவேண்டும்.

விளையாட்டுத்திடல் கொலையாட்டத்திடலாகியது!

கடந்த சனிக்கிழமை லிவர்பூலில் உள்ள அன்பீல்ட் காற்பந்தாட்ட மைதானத்தில், லிவர்பூல் கோஷ்டிக்கும் நொற்றிங்ஹாம் போஷஸ்ற் கோஷ்டிக்கும் இடையில் இடம்பெற்ற காற்பந்தாட்ட அரை இறுதிப் போட்டியின்போது 94 பார்வையாளர்கள் ஜன நெரிசலால் கொல்லப்பட்டனர்.

விளையாட்டுத் தொடங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர், பிற்றி வந்து சேர்ந்த லிவர்பூல் ரசிகர் வெள்ளம் பின்கதவால் பொலிசாரால் உள்நுழைய விடப்பட்ட போது, ஏற்கனவே பார்வையாளர்களாகி நின்று கொண்டிருந்தவர்கள் இவர்களால் ஏறி மிதிக்கப்பட்டு, மூச்சுத்திணறி இறக்க நேர்ந்தது. இப்படி இறந்தவர்களுள் சிறுவர்கள் உட்பட 94 பேர் ஆகும். இது நான்கு வருடத்துக்குள் முன்நடந்த இரண்டாவது துக்கரமான சம்பவமாகும். முன்னர் 1985 இல் பெல்ஜியத்தில் நடந்த காற்பந்தாட்டத்தின்போது 39 பேர் கொல்லப்பட்டதற்கும் லிவர்பூல் ரசிகர்களே காரணம் என்பது குறிப்பிடத்க்கது. 1971 இல் கிளாஸ்கோவில் நடந்த காற் பந்தாட்டத்தின் போது 66 பேர் கொல்லப்பட்டனர். 1964 இல் பேருவில் நடந்த காற்பந்தாட்டத்தின் போது 300 ரசிகர்கள் கொல்லப்பட்டதே விளையாட்டு வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய துக்கர நிகழ்ச்சியாகும்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மேற்படி அசம்பாவிதத்தால் லிவர்பூல் நகர் சோகமயமாகக் காட்சிதருகிறது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டமக்கள் அன்பீல்ட் விளையாட்டரங்கிற்கு வருகை தந்து மலர் வளையங்கள் சாற்றி தம் துக்கத்தை தெரிவித்துக் கொண்டனர். அத்தகைய மலர் வளையங்களில் ஒன்றில் பின்வரும் வாசகங்கள் காணப்பட்டன. ''ரிக்கற் கிடைக்காத இரண்டு அதிர்ஷ்டசாலிகளிடம் இருந்து''.

பேச்சுவார்த்தை பலன் அளிக்குமா?

அரசியலில் நிகர் நிருப்பங்கள் ஏற்படுவதுண்டு. எதிரும் புதிருமாய் இருந்தவர்கள் பின்னர் இணைவதும், முன்னர் நண்பர்களாய் இருந்தவர்கள் பிரிவதும் சகஜம். அரசியலில் நிரந்தர நண்பர்களோ, நிரந்தர எதிரிகளோ இல்லை என பிரிட்டிஷ் அரசியல்வாதி ஒருவர் குறிப்பிட்டிருப்பது மனங்கொள்ளத் தக்கது.

ஜனாதிபதி பிரேமதாசா விடுத்த அழைப்பிற்கு, இலண்டனிலுள்ள நமது அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள கொழும்பிற்கு வருவார் என விடுதலைப் புலிகள் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை பலன் அளிக்குமா? என்ற கேள்வி இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

தமது இலட்சியம் தமிழீழமே என விடுதலைப் புலிகள் உறுதியாக கூறிவருகின்றனர். யு.என்.பி.யை பொறுத்தவரை, தமிழீழம், என்ற பேச்சிற்கே இடமில்லை. சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. வடகிழக்கு மாகாண சபைக்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் எதுவுமே வழங்கப்படவில்லை.

இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் அதிக பலன் அளிக்கும் என எதிர்பார்க்க முடியாது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கிடையில், பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

மரபுகளை செயற்கையாக உயிர்ப்பிக்க முயற்சி

மரபுவழி வந்த பழக்கவழக்கங்களுக்கு முதன்மை கொடுக்குமாறு சகல பாடசாலைகளிலும் கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

இதன் நோக்கம்? கட்டுப்பாடுமிக்க, அமைதியை விரும்பும் பிள்ளைகளை உருவாக்குவதே, பாராட்டத்தக்க நோக்கமதான்.

பாடசாலைகள் மே. 2 இல் மீண்டும் திறக்கும்போது, மாணவர்கள், பெற்றோர்களுடன் பாடசாலைகளுக்குச்சென்று, பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் வணங்கவேண்டும் என அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கம் எந்த நூற்றாண்டில் வாழ்கின்றது? மரபுகளைச் செயற்கையாக உயிர்ப்பிக்கலாம் என நினைக்கின்றதா? தொலைகாட்சியை இலங்கைக்கு அறிமுகப் படுத்தி, நுகர்வோர் சமுதாயத்தை இங்கு உருவாக்கிய அரசாங்கம் இவ்வாறு செயல விழைவது ஆசாபூதித்தனத்தின் உச்சமே.

வெலியோயா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து செயற்பட நிர்மாணிக்கப்படுகிறது'' என்று கூறப்படுகிறது.

இதன்படி பார்த்தால் வடக்கும், கிழக்கும் அடுத்தடுத்துள்ள மாகாணங்களாக இருக்கும் பட்சத்தில் மட்டும்தான் இணைவதோ பிரிவதோபற்றிய விடயத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் தேவையுண்டு. அல்லாத பட்சத்தில் அவை நிரந்தரமாகவே வேறுபட்ட நிர்வாகங்களுக்குரிய மாகாணங்களாகவேதான் இருக்கும்.

''வெலியோயா'' வில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டு அதனை அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கும் சதியை நிறைவேற்றிவருவதன் மூலம், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் என்ற அந்தஸ்தை இழந்து விடுகின்றன. இதன்படி வடமாகாணத்துக்கும் கிழக்குமாகாணத்துக்கும் குறுக்கே வடமத்திய மாகாணமே இவ்விரண்டுக்கும் அடுத்துள்ள மாகாணமாக மாறிவிடுகிறது. இந்தியாவில் பிறந்த சாணக்கியனையே தோற்கடிக்கும் விதத்தில் ஒப்பந்தம் செய்து, இன்றைய இந்திய அரசியல்வாதிகளையும் தோற்கடித்துவிட்டு, இப்போ சாதுபோல் ஒதுங்கியிருக்கிறார் இதன் மூலகர்த்தாவான ஜே.ஆர்.

இஸ்ரேல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் நடத்திவருகின்றனர் என, இஸ்ரேலிய பொலிசார் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த வகுப்புக்களில் இனமும் ஏறக்குறைய 300 மாணவர்கள் பங்கு பற்றுகிறார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்புக்களை நிறுத்துமாறு பாடசாலை அதிபர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு பொலிசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகளையும் பல்கலைக்கழகங்களையும் மூடுவதற்கு இராணுவம் பிறப்பித்துள்ள உத்தரவின்படி, எந்தவகையானதொரு கல்வி நிறுவனத்தையும் நடத்துவது கிறிமினல் குற்றமாகும்.

விஷமிகளின்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

அறிவிக்கின்றன. கடந்த புதன்கிழமை வெடித்த ெந்த இன மோதலுக்குக் காரணம் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த 3 பிரபல வர்த்தகர்கள் கடத்தப்பட்டதேயாகும். பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் இதற்குப் பதிலடியாக தமிழ் வர்த்தகர்களும் கடத்தப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. இது அங்கு இரு சமூகங்களுக்கிடையேயும் பெரும் மோதலை ஏற்படுத்தியதால் அங்கு அமைதிப்பணை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எது எவ்வாறுயினும் இன்று தமிழ் பேசும் இனம் பலவகையிலும் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் இத்தகைய தூர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பது மிகவும் வருத்தத்துக்குரியது என்றும் இதை இரு சமூகத்தவரும் கவனத்தில் கொண்டு பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ரேபிள் ரெனிசில் சுவீடன் உலக சம்பியன்

டோர்ட்மன்டில் நடைபெற்ற உலக சம்பியன் விருதிற்கான ரேபிள் ரெனிஸில் இறுதிப் போட்டியில், ஆண்கள் பிரிவில். சுவீடன் சீனுவை 5—0 என்ற விதத்தில் தோற்கடித்தது.

ஆண்கள் பிரிவில் சம்பியன் விருதினை, கடந்த பல ஆண்டுகளாக சீனுவே தொடர்ந்து பெற்று வந்தது. அச்சாதனை, சுவீடனால் இப்போது முறியடிக்கப்பட்டது.

திறமையும், குழு உணர்வும், கடின உழைப்பும் தான் தனது குழு உலக விருதினைப் பெற உதவின என்று, சுவீடன் குழுவின் பயிற்சியாளரான 'கிளென் ஒஸ்த்' பத்திரிகையாளரிடம் கூறினார்.

அம்மையாரின்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரேல் அங்கீகரிக்க [வேண்டும். அதுவரை இஸ்ரேலுடனான சகல ராஜரீகத் தொடர்புகளையும் இலங்கை அரசு நிறுத்தி வைக்க வேண்டும்'' எனக் கோரும், பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதத்கு சிறிமா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இப்பத்திரிகை, இல. 118, 4-4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 22-4-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.